உலகப் போரின் தீய தாக்கங்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக ஹுஸூர் அன்வர் அவர்களின் வழிகாட்டல்கள்
பக்கம் 3

எஸ்ஸன்ஸ் ஆஃப் இஸ்லாம் இஸ்லாம் உண்மையான உயிருள்ள மார்க்கம் (தொடர் 2)
பக்கம் 12

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிவுசார் அற்புதங்கள்
பக்கம் 21

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | April 2025 | Vol. 4 - Issue No. 5
Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311



நண்பர்களே! விழித்தெழுங்கள்! இப்பொழுது மீண்டும் நிலநடுக்கம் வரவிருக்கிறது!
பிறகு இறைவன் தனது வல்லமையை விரைவில் காட்டவிருக்கிறான்.
அன்பர்களே! இதற்கான சிகிச்சை ஏதும் செய்திடுங்கள்!
கவனமற்றோரே! வானம் இப்பொழுது நெருப்பை பொழியவிருக்கிறது.

– ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)



# திருக்குர்ஆன்

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ
نِعْمَتِيْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا

இன்று நான் உங்களுக்காக, உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்துள்ளேன். (5:4)



# ஹதீஸ்

أَنَّ رَجُلاً، سَأَلَ النَّبِيَّ صلى الله عليه وسلم
أَىُّ الإِسْلاَمِ خَيْرٌ قَالَ " تُطْعِمُ الطَّعَامَ،
وَتَقْرَأُ السَّلاَمَ عَلَى مَنْ عَرَفْتَ وَمَنْ لَمْ تَعْرِفْ "

ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், இஸ்லாத்தில் மிகச் சிறந்த நற்செயல் எது? என்று வினவினார். அதற்கு ஹஸ்ரத் நபி நாயகம் (ஸல்) அவர்கள், ஏழைகளுக்கு உணவளிப்பதும், தெரிந்தவர் தெரியாதவர்களுக்கு ஸலாம் கூறுவதுமாகும் என்று கூறினார்கள். (புகாரி தொகுதி 1 நூல் 2 ஹதீஸ் எண் 12)

# உலகப் போரின் தீய தாக்கங்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டல்கள்

**ஜனாப் K. தாரிக் அஹ்மத் ஸாஹிப்**
(Additional Nazir Islah wa Irshaad, Noor-ul-Islam)


**தமிழாக்கம்: இப்னு வஸீம்**

مَنِ اهۡتَدٰی فَاِنَّمَا یَهۡتَدِیۡ لِنَفۡسِهٖ ۚ وَمَنۡ ضَلَّ فَاِنَّمَا یَضِلُّ عَلَیۡهَا ؕ
وَلَا تَزِرُ وَازِرَةٌ وِّزۡرَ اُخۡرٰی ؕ وَمَا كُنَّا مُعَذِّبِیۡنَ حَتّٰی نَبۡعَثَ رَسُوۡلًا

பொருள்: நேர்வழியைப் பெறுபவர் தனது ஆன்மாவுக்காகவே நேர்வழியைப் பெறுகிறார். வழிதவறுபவர் தனது பயனுக்கு எதிராகவே வழி தவறுகிறார். சுமை சுமக்கும் எவரும் பிறரின் சுமையைச் சுமக்க மாட்டார். நாம் ஒரு தூதரை அனுப்பி(சான்றை முழுமைப்படுத்தி)டாத வரை ஒருபோதும் தண்டனையை அனுப்புவதில்லை. (17:16)

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தியைப் பெற்று கூறுகிறார்கள்: "அந்நாளில் வானிலிருந்து தெள்ளத் தெளிவான புகை ஒன்று இறங்கும். அந்நாளில் பூமி செந்நிறமாகி விடும். அதாவது, கடுமையான பஞ்சத்திற்கான அறிகுறிகள் வெளிப்படும். எதிரிகள் உம்மை இழிவுபடுத்த முயற்சி செய்த பிறகு, நான் உமக்கு கண்ணியம் அளிப்பேன். உமது பணி முழுமையடையக் கூடாது என்று அவர்கள் எண்ணுவார்கள். உம்முடைய பணிகள் அனைத்தையும் முழுமைப்படுத்திடாத வரை உம்மை விடுவதற்கு இறைவன் விரும்பவில்லை. நான் ரஹ்மான் ஆவேன். மேலும், ஒவ்வொரு விஷயத்திலும் உமக்கு வசதியளிப்பேன். ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் உமக்கு அருள்களை வழங்குவேன்." (ஹகீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 98)

பிறகு, பிறிதோரிடத்தில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "கேட்போரே! நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்! இந்த முன்னறிவிப்புகள் வெறும் சாதாரணமான முறையில் வெளிப்பட்டால், நான் இறைவன் புறமிருந்து வரவில்லை என்று புரிந்து கொள்ளுங்கள். ஆனால், இந்த முன்னறிவிப்புகள் இவை நிறைவேறும் நேரத்தில் உலகில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி விட்டால், கடுமையான பதற்றத்தால், பித்துப் பிடித்தவர் போன்று ஆக்கி விட்டால், பெரும்பாலான இடங்களிலிருந்து கட்டடங்களுக்கும் உயிர்களுக்கும் சேதம் ஏற்படுத்தினால், எனக்காக இந்த அனைத்தையும் செய்து காட்டிய அந்த இறைவனுக்கு நீங்கள் அஞ்சுங்கள்." (தஜல்லிய்யாத்தே இலாஹிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 20, பக்கம் 396)



நண்பர்களே! விழித்தெழுங்கள்! இப்பொழுது மீண்டும் நிலநடுக்கம் வரவிருக்கிறது!
பிறகு இறைவன் தனது வல்லமையை விரைவில் காட்டவிருக்கிறான்.

அன்பர்களே! இதற்கான சிகிச்சை ஏதும் செய்திடுங்கள்.

கவனமற்றோரே! வானம் இப்பொழுது நெருப்பைப் பொழியவிருக்கிறது.

- ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை)

ஒவ்வொரு மனிதனும் இன்றைய காலகட்டத்தில் அமைதியின்மைக்கு இலக்காகியுள்ளான். அமைதி மற்றும் சமாதானம் சீர்குலைவதைத் தன்னுடைய கண்களால் காணவும், காதுகளால் கேட்கவும் செய்கிறான். இன்று உலகம் ஒரு மன உளைச்சல் மற்றும் நிம்மதியின்மைக்கு இலக்காகி இருக்கிறது. உலகின் பல்வேறு பகுதிகளில் போர் தீ மூண்டு விட்டது. இன்றைய காலகட்டத்தில் இறைவனின் ஒரு தண்டனையின் தோற்றம், மற்றோர் உலகப் போர் வடிவில் வெளிப்படலாம்.

இத்தகைய போரின் தீய தாக்கங்களும், அழிவும் வெறும் ஒரு சம்பிரதாயமான போராகவோ, தற்போதைய சந்ததிகள் வரை மட்டுமே உட்பட்டு இருந்து விடாது என்ற விஷயத்தில் எந்த ஐயமும் இல்லை. உண்மையில், இதன் பயங்கரமான விளைவுகள் இனி பல சந்ததிகள் வரை வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும்.

இறுதிகாலத்தின் இமாம் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வாழ்நாள் முழுவதும் முஸ்லிம்களையும், முழு உலகையுமே அவர்கள் தப்லீஃ செய்யவில்லை என்றால், மேலும், உண்மையான இறைவன் மீதும், அவனுடைய தூதர் (ஸல்) அவர்கள் மீதும், காலத்தின் இமாம் அவர்கள் மீதும் ஈமான் கொள்ளவில்லை என்றால், அல்லாஹ்வின் கடுமையான தண்டனையில் பிடிக்கப் -படுவார்கள் என்று மீண்டும் மீண்டும் எச்சரித்தார்கள்.

திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது: நூஹ் நபியின் சமுதாயம் ஷிர்க் மற்றும் சிலை வணக்கம் காரணத்தால்

சூறாவளியால் அழிக்கப்பட்டது. ஆணவம் மற்றும் நன்றிகேடு ஆகியவற்றின் காரணமாக ஆது சமுதாயம் கடும் புயலின் சீற்றத்துக்குள்ளானது. சமூது சமுதாயம் அல்லாஹ்வின் அடையாளமான ஒட்டகத்திற்கு சேதம் ஏற்படுத்தியதனால், வலுவான அலறல் மற்றும் நிலநடுக்கத்தால் அழிந்து போனது. தீய செயல் மற்றும் ஓரினசேர்க்கையின் காரணமாக லூத் நபியின் சமுதாயம் தலைகீழாகிப் போனது. நிறுத்துக் கொடுப்பதில் குறை வைத்ததனாலும், ஏமாற்றியதனாலும் மரத்தின் தோழர்கள் மீது கடுமையான வெப்பமும்



நிலநடுக்கங்களும் வந்தன. ஆனால், தற்காலத்தில் எல்லாம் வல்ல அந்த இறைவன் ஒரு காலம் வரை மௌனமாக இருந்தான். மேலும், அவனுடைய கண்களுக்கு முன்னால் முந்தைய அனைத்து சமுதாயங்களின் அருவருப்பான செயல்கள் செய்யப்பட்டு வந்தன. இன்றைய உலகத்தின் மீது நாம் பார்வையை செலுத்தும் போது, எந்தத் தீமைகள் காரணமாக முந்தைய சமுதாயங்கள் மீது இறைவனின் கோபம் கொந்தளித்ததோ அந்த எல்லாத் தீமைகளும் இன்றைய காலகட்டத்தில் காணப்படுகின்றன என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

நிராகரிப்பும் இணைவைத்தலும் தனது உச்சத்தில் உள்ளன. இறைவனின் தூதர்களைப் பொய்ப்பிக்கப்படுவது மட்டுமின்றி, அதையும் தாண்டி அவர்களை இழிவுபடுத்து -வதற்காக வேடிக்கையான விஷயங்களை உருவாக்கி வைத்துள்ளார்கள். அநியாயமும் அக்கிரமும் எல்லை கடந்து விட்டன. வெட்கக் கேடு எந்த அளவுக்கு அதிகரித்து விட்டது என்றால், வெட்கம், நாணம், மறைத்தல், திரையிடுதல் ஒரு வகையில் உலகிலிருந்து மறைந்து போய் விட்டது.

வரலாறு இப்பொழுது அந்தக் கருப்பு அத்தியாயங் -களின் பக்கங்களை மீண்டும் ஒருமுறை புரட்டுகிறது. இறைவனின் தண்டனையின் தோற்றம் வெளிப்படுகிறது. இந்தக் காலத்தைப் பற்றிய வரைபடத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “இந்த நாட்டுக்கான முறை அருகில் வந்து கொண்டிருக்கிறது என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். நூஹ் நபியின் காலம் உங்கள் கண் முன் வந்து விடும். லூத் நபியின் மண்ணில் நடந்த நிகழ்வை நீங்கள் உங்கள் கண்களாலேயே கண்டு கொள்வீர்கள். ஆனால், இறைவன் மெதுவாகவே சினம் கொள்கிறான். உங்கள் மீது கருணை காட்டப்படும் பொருட்டு தவ்பா செய்யுங்கள். இறைவனை விடுபவர் மனிதர் அல்ல. மாறாக, அவர் ஒரு புழு ஆவார். அவனுக்கு அஞ்சாதவர் உயிருல்லவர் அல்ல. மாறாக, மரணித்தவர் ஆவார்.” (ஹகீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 269)

இப்பொழுது மரணத்தின் வழியில் மார்க்கத்திற்கு
சிறிது உதவி கிடைக்கும்.

இல்லையென்றால், நண்பர்களே! மார்க்கம் ஒருநாள்
மரணித்துப் போகவிருக்கிறது.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மற்றும் மாபெரும் கலீ∴பாக்களின் முன்னறிவிப்புகளிலிருந்து நமக்குத் தெளிவாகத் தெரிய வரும் உண்மைத்துவம் என்னவென்றால், மூன்றாம் உலகளாவிய அழிவின் முடிவு இஸ்லாத்தின் உலகளாவிய வெற்றி மற்றும் ஆதிக்கத்தின் துவக்கமாக இருக்கும். அதற்குப் பிறகு, மிகவும் வேகமாக இஸ்லாம் முழுவுலகிலும் பரவத் துவங்கும். மக்கள் பெரும் எண்ணிக்கையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வார்கள்.

இஸ்லாம் மட்டுமே ஓர் உண்மையான மார்க்கமாகும் என்பதையும், ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியின் மூலமாக மட்டுமே மனிதனுக்கு ஈடேற்றம் கிடைக்கப் பெற முடியும் என்பதையும் அறிந்து கொள்வார்கள்.

எனவே, காலம் மனிதனை இன்னல்களிலும் சிரமங்களிலும் ஆழ்த்தியிருக்கும் போது, இத்தகைய நிலையில் நம்பிக்கையாளர் ஒருவர் முன்னரை விட அதிகம் அல்லாஹ்வின் பக்கம் திரும்ப வேண்டிய தேவையுள்ளது. மேலும், அல்லாஹ்வின் வழியைக் காட்டுவதற்காக, அல்லாஹ் தன் தூதரை அனுப்பினான். இது குறித்து அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்:

وَاعْتَصِمُوْا بِحَبْلِ اللّٰهِ جَمِيْعًا وَّ لَا تَفَرَّقُوْا ۠ وَاذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ اِذْ كُنْتُمْ اَعْدَآءً فَاَلَّفَ بَيْنَ قُلُوْبِكُمْ فَاَصْبَحْتُمْ بِنِعْمَتِهٖۤ اِخْوَانًا ۚ وَكُنْتُمْ عَلٰى شَفَا حُفْرَةٍ مِّنَ النَّارِ فَاَنْقَذَكُمْ مِّنْهَا ؕ كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ

பொருள்: அல்லாஹ்வின் கயிற்றை அனைவரும் உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். மேலும் பிரிந்து போய் விடாதீர்கள். உங்கள் மீது (செய்து)ள்ள அல்லாஹ்வின் அருளை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் (ஒருவருக்கொருவர்) எதிரிகளாயிருந்தபோது, அவன் உங்கள் உள்ளங்களை ஒருவர் மற்றவருடன் இணைத்து விட்டான். பிறகு, நீங்கள் அவனுடைய அருளால் சகோதரர்களாக ஆகிவிட்டீர்கள்.

நீங்கள் நெருப்புக்கிடங்கின் ஓரத்தில் (நின்று கொண்டு) இருந்தீர்கள். எனவே, அவன் உங்களை அதிலிருந்து காப்பாற்றி விட்டான். இவ்வாறே அல்லாஹ் உங்களுக்குத் தன் வசனங்களை, நீங்கள் நேர்வழியைப் பெறும்பொருட்டு தெள்ளத் தெளிவாக விளக்குகின்றான். (3:104)

இன்று இறைவனால் அனுப்பப்பட்ட அதே நபர் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹின் வடிவத்தில் பல்வேறு வழிமுறைகள் மூலமாக, பல்வேறு வழிவகைகள் மூலமாக, பல்வேறு சொற்களில், பல்வேறு விஷயங்கள் பக்கம் கவனமூட்டியவாறு நமக்கு வழிகாட்டுகிறார்கள். அல்லாஹ் மற்றும் அவனுடைய ஏற்றுக் கொள்ளப்பட்ட தூதர் (ஸல்) அவர்களின் போதனைகளை உள்ளடக்கிய இந்த வழிநடத்துதல், நம்மை எல்லா வித ஆபத்துகளில் இருந்து காப்பாற்றுவதற்கும், நம் வாழ்விற்கான ஏற்பாட்டை செய்தவற்கும் எத்தகைய ஒரு வழிமுறை என்றால், அது நிரந்தரமாக தொடரக்கூடியதாகும். நாம் அதன்படி செயல்படக்கூடியவர்கள் ஆவோமாயின், அது ஆகச்சிறந்த விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகும்.

எனவே, மனிதனுக்கு மூன்றாம் உலகப் போரின் தீய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்கு இறைவன் பக்கம் குனிவதையும் இறைவனைத் தனக்கு உதவி, ஆதரவு புரிபவனாக ஆக்குவதையும் தவிர வேறு எந்த வழியும் இல்லை.

கடந்த இருபது ஆண்டுகளாக சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் (அய்யதஹுஉல்லாஹுஉத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் உலகத்தை மூன்றாம் உலகப் போரின் அபாயங்கள் குறித்து எச்சரிக்கிறார்கள். மேலும், ஜமாஅத் மக்கள் இந்த உலகளாவிய அழிவின் பயங்கரமான தீய தாக்கங்களிலிருந்து தம்மையும் தம்முடைய வருங்கால சந்ததிகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் பொருட்டு, ஜமாஅத் மக்களுக்கு துஆக்கள் செய்வதுடன் சேர்த்து தங்களது சுய சீர்திருத்தம் மற்றும் தர்பிய்யத்தின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்துகிறார்கள்.

சய்யிதுனா ஹுஉஸுஉர் அன்வர் (அய்யதஹுஉல்லாஹ்) அவர்கள் அக்டோபர் 7, 2016 அன்று ஆற்றிய ஜுஉமுஆ பேருரையில் கூறுகிறார்கள்: "எனவே, இன்றும் உலகின் நிலை உலகத்தின் முடிவு என்ன ஆகுமோ என்ற கவலையில் ஆழ்த்தக் கூடியதாக உள்ளது. கடந்த நாள்களில் ஒரு நபர், 'உலகம் மிகவும் வேகமாக அழிவை நோக்கிச் செல்கிறது. பிறகு, நாம் என்ன ஆவோம்' என்று கூறினார். எனவே, இதற்கான பதிலையோ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு கவிதையிலும் கொடுத்து விட்டார்கள். இங்கும் அன்னார் கூறுகின்றார்கள்:

இது நெருப்பாகும்! ஆயினும், அதிசயங்களை
செய்து காட்டும் இறைவன் மீது நேசம் கொண்டிருப்போர்
அனைவரும் (இந்த) நெருப்பிலிருந்து காப்பாற்றப்படுவர்.

(உருது துர்ரே ஸமீன் பக்கம் 154)

எனவே, அசல் விஷயம் என்னவெனில், நாம் அல்லாஹ்வுடன் தொடர்பை வலுப்படுத்த வேண்டும். அல்லாஹ்வுக்கான உரிமைகளை செலுத்துகின்ற அதே வேளையில், அவனுடைய அடியார்களுக்கான உரிமை-களையும் செலுத்தக் கூடியவர்களாக ஆக வேண்டும். இறைவன் கூறியுள்ள விதிகளின் அடிப்படையில் நன்மைகளான, அந்த நன்மைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும், தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். இறைவனின் பார்வையில் தீமைகளாக



இருக்கும் அந்தத் தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அவற்றை மேலான அல்லாஹ் திருக்குர்ஆனில் தெளிவுபட எடுத்துக் கூறியுள்ளான்.

நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்டபிறகு, கொள்கை மற்றும் அமல் அடிப்படையில் வலுவிலும் வலுவாக ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இவைதான் நமது ஈடேற்றத்திற்குக் காரணமாக அமைகின்றன. இந்த விஷயங்கள்தான் அல்லாஹ்வுக்கும் பிடித்தமானவையாகும்...... எனவே, நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விஷயங்களை முன்னிறுத்தியவாறு அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைகளின்படி அமலை ஆய்வு செய்ய வேண்டிய தேவையுள்ளது. மேலும், இதை எப்பொழுதும் ஆய்வு செய்து கொண்டே இருக்க வேண்டும்."

இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசலின் நூறாண்டுகள் நிறைவடைவதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் ஹுஉஸுஉர் அன்வர் (அய்யதஹுஉல்லாஹ்) அவர்கள் அழிவின் தீய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்காக நமக்கு அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் ஆகியவற்றின் பக்கம் சிறப்பு கவனமூட்டியுள்ளார்கள்.

ஹுஉஸுஉர் (அய்யதஹுஉல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "நிச்சயமாக! நாம் பெரும் கொந்தளிப்பு மிக்க காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகில் வெறுப்புத் தீ பரவியுள்ளது. இத்தகைய நிலையில் நாம் நமது செயல் மற்றும் நடவடிக்கைகள் மீது பார்வையிட வேண்டிய தேவை உள்ளது. நாம் ஓரிறைவனின் படைப்பினங்களாக இருக்கின்ற வகையில், நாம் அனைவரும் ஒருவர் மற்றவருடன் அன்பு மற்றும் நேசத்தை வளர்த்திட வேண்டும். மேலும், ஒருவர் மற்றவருக்கு கண்ணியமளித்தல் எனும் உறவை வலுப்பெறச் செய்திட வேண்டும்.

இந்த வழிமுறையைக் கொண்டே நாம் உலகை எப்பொழுதும் நிலைத்திருக்கக்கூடிய அமைதியின் பக்கம் கொண்டு வர முடியும். இந்த வழிமுறையின் மூலமாகவே மனித குலம் தன்னைப் படைத்தவனின் காலடிகளில் வர முடியும். ஒரு முஸ்லிம் என்கிற வகையில், இந்த வாழ்வு

தற்காலிக வாழ்வாகும் இதற்குப் பிறகுள்ள மறுமை வாழ்வு அசலான மற்றும் உண்மையான வாழ்வாகும் அங்கு நமக்கு நம்முடைய அனைத்து அமல்களுக்கும் கணக்கு வழங்க வேண்டி வரும் என்பது நமது ஈமான் ஆகும்.

இந்த அடிப்படையில் நாம் நமது நாளைக்காக எதை முன்னால் அனுப்பிக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். உலகம் எந்த வேகத்தில் அழிவின் வழிகளில் செல்கிறதோ நாம் அதை நிறுத்துவதற்காக நமது முழு முயற்சியை செய்ய வேண்டும். அணு அழிவிற்கான இந்த வழியில் உலகம் வேகமாக நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. அதைக் குறித்த நேரத்தில் தடுக்கவில்லை என்றால், பிறகு, உலகின் வரக்கூடிய சந்ததிகள் அதற்கான விளைவுகளை அனுபவிப்பார்கள். மேலும், அதன் அச்சுறுத்தும் விளைவுகளால் உலகம் எப்படி அழிந்துபோகும் என்றால், அதன் விளைவால் வரப்போகும் சந்ததிகள் உடல் ஊனமுற்றவர்களாகவும், இயலாதவர்களாகவும் பிறப்பார்கள்.

எனவே, வரப்போகும் சந்ததிகளுக்காக எப்படிப்பட்ட பூமிக்கான, எப்படிப்பட்ட உலகத்திற்கான வித்திடுகிறோம் என்று இன்று நாம் பார்க்க வேண்டும். அல்லாஹ் அவன் மீதான அன்பையும், அவனுடைய படைப்பினங்கள் மீதான அன்பையும் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் எழுச்சியுறச் செய்வானாக! நிச்சயமாக இந்த நோக்கத்திற்காகவே இந்த ஃபஸ்ல் பள்ளிவாசல் கட்டப்பட்டது. அல்லாஹ்வின் அருளால் நாம் நூறாண்டுகளுக்குப் பிறகும் இந்த நோக்கத்திற்காகவே முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். மேலும், இந்த நோக்கத்திற்காகவே இன்று இந்த நிகழ்ச்சியை நடத்துகிறோம்.

அல்லாஹ் நம்மை நம்முடைய கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு இந்த சமூகத்தின் மேம்பாட்டுக்காக முயற்சி செய்யக்கூடியவர்களாக ஆக்குவானாக! அல்லாஹ் நம்மை இந்த மிக முக்கியமான நோக்கத்தைப் பெறக்கூடியவர்களாக ஆக்குவானாக! (அல் ஃபஸ்ல் நவம்பர் 8, 2024)

> இறையச்சத்திற்கான வழி தொலைந்து போய் விட்டதே! நிலநடுக்கங்கள் ஏன் வராது?
>
> முஸ்லிம் ஒவ்வொருவரும் சொல்லிக் கொள்வதற்கு மட்டும்தான் முஸ்லிமாக இருக்கிறார்.
>
> - ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

போரின் தீய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்காக நாம் நமது இறையச்சத்தின் தரத்தை உயர்த்திட வேண்டும். அதன் பக்கம் கவனமூட்டியவாறு சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மார்ச் 15, 2024 இன் ஜுமுஆ பேருரையில் இவ்வாறு கூறுகிறார்கள்: “அல்லாஹுத்தஆலா போரிலிருந்தும் அதன் பயங்கரமான விளைவுகளில் இருந்தும் காப்பாற்றுவானாக! போர் நடக்கும் சூழ்நிலையில் அஹ்மதிகளும் அதனால் பாதிக்கப்படுவார்கள் என்பது வெளிப்படையான விஷயம். அல்லாஹுத்தஆலா அவர்களை அதிலிருந்து பாதுகாத்து வைப்பானாக! அதிலிருந்து தப்பிப்பதற்காகவும் ஒவ்வோர் அஹ்மதியும் தனது இறையச்சத்தின் தரத்தை மேம்படுத்த வேண்டியவது வரும். இதைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அல்லாஹுத்தஆலா இதற்கான நல்வாய்ப்பையும் அனைவருக்கும் வழங்குவானாக!”

அஹ்மதிகளின் மன தைரியம் எந்த அளவு அதிகமாக இருக்க வேண்டும் என்றால், இந்த உலகளாவிய போரின் தீய தாக்கங்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக தமக்காகவும், தம்முடன் தொடர்புடையவர்களுக்காகவும் மட்டுமே கவலைபடக் கூடியவர்களாக நாம் இருக்கக் கூடாது. மாறாக, மனித சந்ததி எஞ்சியிருப்பதற்காக கடுமையாகப் போராட வேண்டியது ஜமாஅத் மக்களின் உலகளாவிய பொறுப்பாகும். இது தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறுகிறார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மே 2, 2022 அன்று ஆற்றிய ஈதுல் ஃபித்ர் பேருரையில் இவ்வாறு கூறுகிறார்கள்:

“இன்றைய நாள்களில் உலகம் அழிவின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. உலகைக் காப்பாற்றுவதும் நமது பொறுப்பாகும். உலகில் அடியார்களின் உரிமைகளை செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்தப்படுவதில்லை என்பதனால் இது நடக்கிறது. உலகில் அடியார்களுக்கான உரிமைகள் செலுத்தப்பட்டிருந்தால், பிறகு நாம், ஈராக், சிரியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய இடங்களில் அழிவைக் கண்டிருக்க மாட்டோம். அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட மாட்டாது என்ற நல்லெண்ணமும் இருக்கிறது. ஆனால், பேச்சுகள் போய்க் கொண்டுதான் இருக்கின்றன. எவரும் இதற்கு உத்தரவாதமும் அளிக்க முடியாது. எவ்வாறு இருப்பினும், இதன் முடிவு மிகவும் பயங்கரமானதாக இருக்கலாம்.

இப்போது மக்களுக்கு அடியார்களுக்கான உரிமையை செலுத்துவதன் பால் கவனமூட்டுவது அஹ்மதிகளின் பொறுப்பாகும். சமூக ஊடகங்களில் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பதற்கு பதிலாக, மக்களுக்கு இறைவன் பால் வருவதற்கான அழைப்பு விடுக்க வேண்டும். மேலும், இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவே உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்பதைப் புரிய வைக்க முயற்சி செய்ய வேண்டும். ஆக, இந்த வழிமுறை தப்லீஃகிற்கான புதிய வழிகளையும் திறந்து விடும். (மே 2, 2022 அன்று ஆற்றிய ஈதுல் ஃபித்ர் பேருரை)

அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் வெளியீடு: மே 6, 2022 பக்கம் 16 இல்) சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அஹ்மதி மருத்துவ சங்கத்தைப் பார்த்துக் கூறுகிறார்கள்:

- ☛ இறையச்சத்திற்கான வழி தொலைந்து போய் விட்டதே! நிலநடுக்கங்கள் ஏன் வராது?
- ☛ முஸ்லிம் ஒவ்வொருவரும் சொல்லிக் கொள்வதற்கு மட்டும்தான் முஸ்லிமாக இருக்கிறார்.

- ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

"நாம் எத்தகைய அமளி நிறைந்த காலத்தில் வாழ்கிறோமோ இதில் போருக்கான அடர்ந்த மேகங்கள் தொடர்ச்சியாக நமது தலைகள் மீது வலம் வந்து கொண்டிருக்கின்றன. பல்வேறு நாடுகளுக்கிடையில் வேறுபாடுகள் எவ்வளவு கடுமையாக அதிகரிக்கின்றது என்றால், வெளிப்படையில், உலகப்போருக்கான நெருப்பு வாயைத் திறந்து கொண்டு நிற்கிறது. அல்லாஹுத்தஆலா அதிலிருந்து அனைவரையும் பாதுகாத்து வைப்பானாக!



இந்தப் போரிலிருந்து தப்பிப்பதற்கான துஆவுடன் சேர்த்து நாம் எத்தகைய முன்னேற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்றால், அவற்றின் மூலம் நாம், வெளிப்படையில், முன்னால் நிற்கும் இந்த அழிவிலிருந்து மனிதகுலத்தைக் காப்பாற்றவும் முடியும். இது குறித்துநான் அமெரிக்கா மற்றும் இதர எல்லா நிறுவனங்களிடமும் கூற விரும்புவதாவது, இது தொடர்பாக வேகமாக தாக்கம் ஏற்படுத்தக்கூடிய, அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் எல்லா விதமான அவசர நிலைகளிலும் எதிர்த்து சண்டையிட முழு திட்டம் வகுத்திடுங்கள்." (அல் ஃபஸ்ல் நவம்பர் 21, 2024)

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மே 3, 2024 இல் ஆற்றிய தமது ஜுமுஆ பேருரையில் உலகப் போரின் தீய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்காக ஆணவத்திலிருந்து தவிர்ந்திருப்பதன் பக்கம் கவனமூட்டியவாறு கூறுகிறார்கள்: "எவ்வாறாயினும், இந்த நிலைமைகள் ஆணவம் கொண்டவர்களின் அகம்பாவத்தை நொருக்குவதற்கும் ஏற்பாடு செய்து விட்டன. மேலும், இப்பொழுது அல்லாஹ்வும் அவர்களது இறுமாப்பை உடைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கையைத் துவங்கி விட்டதாகத் தெரிகிறது. எப்பொழுது இந்தப் பணி முழுமையாக நிறைவடையும் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால், எவ்வாறாயினும், அவர்களது இந்த செருக்கு இப்பொழுது உடையத் துவங்கி விட்டது...... அல்லாஹ் உலகின் பெரும் ஆற்றல்களுக்கு அறிவை வழங்குவானாக! அவர்கள் நீதியுடன் செயல்படுவார்களாக!"

இன்று உலகம் எந்த மூன்றாம் உலகப் போரின் வாய்க்கு அருகில் நின்று கொண்டிருக்கிறதோ அதற்கான மிகப் பெரும் காரணம், உலகத்திலிருந்து நீதி, நியாயம் மறைந்து போய் விட்டதாகும். சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலகின் பெரும் பெரும் பாராளுமன்றங்களுக்குச் சென்று அவர்களுக்கு, 'நீதியின் எதிர்ப்பார்ப்புகள் முழுமைப்படுத்தப்படாத வரை உலகில் அமைதி ஏற்படுவது சாத்தியமில்லை' என்று கவனமூட்டி-யுள்ளார்கள்.

இந்த அறிவுரை மற்றவர்களுக்காக மட்டும் இல்லை. மாறாக, இந்த அறிவுரைகளில் முதலாவதாகப் பார்த்துக் கூறப்படுபவர்களில் ஜமாஅத் மக்களும் இருக்கிறார்கள். தம்முடைய உலக விவகாரங்களிலும் மார்க்க விவகாரங்களிலும் கூட ஜமாஅத் மக்களும் எல்லா மட்டத்திலும் நீதி, நியாயத்தை நிலைநாட்டுவதை உறுதிப்படுத்த வேண்டும். உங்களது உலக விவகாரங்களிலும், மார்க்க விவகாரங்களிலும் நீதியின் எதிர்ப்பார்ப்புகளை முழுமைப்படுத்துங்கள். அப்போதுதான் உலகில் அமைதி நிலைபெற முடியும். இந்த நீதி, நியாயமே நமது கூற்றுக்கும் செயலுக்கும் வேர் ஆக இருக்கும்போதுதான் நாம் இந்தப் போரின் தீய தாக்கங்களில் இருந்தும் பாதுகாக்கப்படுவோம்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலகளாவிய போரின் வெளிப்படையான தீய தாக்கங்களில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்காகவும், அணு ஆயுத அழிவிலிருந்து தப்பிப்பதற்காகவும் ஹோமியோ மருந்துகளையும் அறிவுறுத்தியுள்ளார்கள். ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவு கூர்ந்து வரும்முன் காக்கும் விதமாக, Carcinosin மற்றும் Radium Brom ஆகிய ஹோமியோ மருந்துக் குறிப்பை ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் பயன்படுத்துமாறு வழிகாட்டல் வழங்கினார்கள். மேலும், கூறினார்கள்: 'எல்லாம் வல்ல அல்லாஹ் அனைவரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. ஆமீன்.

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நவம்பர் 22, 2024 இல் போர் நிலைமைகளின் கடுமைகள் குறித்து எச்சரித்தவாறு கூறுகிறார்கள்: இப்பொழுது நான் இதையும் கூற விரும்புகின்றேன். நீங்கள் அனைவரும் அறிந்தது போன்று, ஐரோப்பாவிலும் நிலைமைகள் மிக வேகமாக போரை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. உக்ரைன் மற்றும் ரஷ்யாவின் போர் பரவுவதற்கான அபாயம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. ஐரோப்பாவின் பிற நாடுகளுக்கும் அச்சுறுத்தல்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அறிவுடைமை கொண்டுள்ள, அமைதியை விரும்பக்கூடிய தலைவர்கள் இது தொடர்பாக கவலை உடையவர்களாகவும் உள்ளார்கள். எவ்வாறு இருப்பினும், துஆ செய்யுங்கள். அல்லாஹ் அஹ்மதிகளையும் அமைதியை விரும்பக்கூடிய மக்களையும் போரின் தீய தாக்கங்களில் இருந்து பாதுகாப்பாக வைப்பானாக!

இந்த மக்கள் எதிர்கால தலைமுறையைப் பாதிப்பிற்கு உள்ளாக்கக்கூடிய அளவிலான ஆயுதங்களைப் பயன்படுத்தா-திருப்பார்களாக! முஸ்லிம் நாடுகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் அறிவையும் புரிதலையும் வழங்குவானாக! அவர்களும் உண்மையை அடையாளம் கண்டு கொள்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக!

இரண்டாவது கவனமூட்ட விரும்புவது என்னவெனில், நிலைமைகள் எவ்வாறு வேகமாக மாறி வருகின்றனவோ இந்த

நிலைமைகளுக்கு ஏற்ப முன்பும் மக்களிடத்தில் கவனம் உள்ளதுதான். ஆனால் மீண்டும் நான் நினைவூட்டிக் கொள்கிறேன். வீடுகளில் இரண்டு மூன்று மாதங்களுக்கான உணவுப் பொருட்களை சேமித்து வைப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஆனால் எல்லாவற்றையும் விட மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அவனது திருப்தியை அடைவதற்கு முயற்சி செய்யுங்கள். அவனோடு தொடர்பு ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். அதில் முன்னேறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்."

உலகம் நெருப்பின் விளிம்பில் நின்று கொண்டிருக்கக் கூடிய இத்தகைய நேரத்தில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அதன் தீய தாக்கங்களில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக நம்முடைய செயல் முன்மாதிரிகள் மூலமாக இஸ்லாத்தின் தப்லீக் செய்வதன்பால் நமக்கு கவனமூட்டுகிறார்கள். அப்போதுதான் உலகளாவிய போருக்குப் பிறகு, சொர்க்கம் போன்ற ஒரு சமூகம் உருவாக முடியும். மேலும், அதன் கண்காணிப்பாளர்களாக ஜமாஅத் மக்கள் இருப்பார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறுகிறார்கள்:

இன்றைய நாள்களில், இஸ்லாத்திற்கு எதிராக, முஸ்லிம்களுக்கு எதிராக பல விஷயங்கள் செய்யப் -படுகின்றன. ஆனால், இங்குள்ள சூழலில் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தைப் பார்க்கும் போது, நம்முடைய உயர் நல்லொழுக்கங்களைப் பார்க்கும் போது, இறைவனுடனான நம்முடைய தொடர்பைப் பார்க்கும் போது, முஸ்லிம்கள் தவறான செயல்கள் செய்யக் கூடியவர்கள்; தவறான போதனைகள் வழங்கக் கூடியவர்கள் என்ற ஐயங்களும் சந்தேகங்களும் பலரது சிந்தனைகளிலிருந்து அகன்று விடும்.

எனவே, இந்த நாள்களில் உங்களுடைய சொல்லாலும் செயலாலும் இந்த சூழலை நீங்கள் மிகவும் அமைதி நிறைந்ததாக ஆக்க வேண்டும். இன்னும் சொல்வதாயின், நிரந்தரமாக உங்கள் வாழ்வில் இதை செயல்படுத்த வேண்டும். அதன் மூலம், உலகின் மீது எத்தகைய ஒரு தாக்கம் ஏற்பட வேண்டும் என்றால், இந்த மக்கள்தான் இஸ்லாத்தின் உண்மையான போதனையின் படி செயல்படக் கூடியவர்கள் என்று மக்கள் சொல்ல வேண்டும்.

இஸ்லாத்தின் உண்மையான போதனைதான் உலகிற்கு உண்மையான அமைதியையும் சமாதானத் -தையும் வழங்கிட முடியும். எனவே, இது மௌனமான தப்லீகும் ஆகும். அதை எந்த நூல்களும் இல்லாமல், எந்தச் சான்றுகளும் இல்லாமல் நீங்கள் செய்து கொண்டிருப்பீர்கள்.

நாம் நம்முடைய வாழ்வில் உண்மையான இஸ்லாமிய போதனையின் முன்மாதிரியை உருவாக்கிக் கொண்டால், நாம் நமது பைஅத் உறுதிமொழியை நிறைவேற்றக் கூடியவர்களாக ஆகி விடுவோம். நாம் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிக்கும் போதுதான், வெறும் வெற்று முழக்கங்களைப் போதுமானதாகக் கருதாத போதுதான், நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத் பலன் தரும். (ஆகஸ்ட் 23, 2024 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து...)

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் மேற்கொண்டு கூறுகிறார்கள்: "எனவே இந்த நோக்கத்தை ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'எதை நீங்கள் உங்களுக்காக விரும்புகின்றீர்களோ அதை மற்றவர்களுக்காக விரும்புங்கள்' என்று கூறியுள்ளார்கள்.

ஆக, இந்தப் போதனையின் அடிப்படையில் ஒவ்வோர் அஹ்மதியின் கடமை என்னவென்றால், இந்தத் தப்லீகை, இந்தத் தூது செய்தியை, அன்பு நேசம் மற்றும் அமைதியோடு இருப்பதற்கான இஸ்லாத்தின் தூதுச் செய்தியை, சமாதானம் மற்றும் சமரசத்திற்கான இந்தத் தூதுச் செய்தியை உலகிற்கு எடுத்துக் கூற வேண்டும். அதற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

மேலும், இந்த விஷயத்தைப் பரப்ப வேண்டும். அதாவது, இதுவே மனிதன் நிலைத்திருப்பதற்கான உத்தரவாதமாகும். இதைத் தவிர வேறு எதுவும் கிடையாது. இல்லையென்றால், வருங்கால சந்ததிகள் அழிவு, நாசம் எனும் குழியில் விழுந்து கொண்டே செல்லும். இந்தப் போர்களின் காரணமாக, இனி பிறக்கப் போகும் சந்ததிகள் உடல் ஊனமுற்றவர்களாகவும், முடவர்களாகவும் பிறப்பது ஒன்றும் தொலைவில் இல்லை." (அக்டோபர் 18, 2024 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து...)



சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "துஆவின் மீது ஈமான் உள்ள மனிதர் மிகவும் நற்பேறு பெற்றவர் ஆவார். ஏனெனில், அவர் அல்லாஹுத்தஆலாவின் வினோதத்திலும் வினோதமான ஆற்றல்களைப் பார்க்கிறார். மேலும், இறைவனைப் பார்த்து, அவன் வல்லமை பெற்ற, கருணையுள்ள இறைவன் ஆவான் என்று ஈமான் கொள்கிறார்." (மல்ஃபூஸாத் தொகுதி 07, பக்கம் 265-266. 1984 வெளியீடு.)

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மூன்றாம் உலகப் போரின் தீய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்காக ஜமாஅத் மக்களுக்கு எப்பொழுதும் துஆக்கள் செய்யுமாறு வலியுறுத்தினார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நமக்கு துஆக்களின் பக்கம் கவனமூட்டாத அன்னாரின் எந்தவொரு குத்பாவோ சொற்பொழிவோ கிடையாது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தாம் ஏப்ரல் 5, 2024 இல் ஆற்றிய ஜுமுஆ பேருரையில் கூறுகிறார்கள்: போர்களின் நெருப்பிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காகவும், அதற்குப் பிறகு ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்காகவும் அதிகம் துஆ செய்யுங்கள். அல்லாஹ் நம்மை இதிலிருந்து பாதுகாப்பானாக! இப்பொழுது இந்தப் போர் முன்னால் இருப்பதாகத் தெரிகிறது. முன்னால் என்ன, இப்பொழுதோ துவங்கி விட்டது என்றே சொல்ல வேண்டும்..... அவற்றின் தீங்கிலிருந்து தப்பிப்பதற்காக, அஹ்மதிகள் தம்மை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்ல வேண்டிய மற்றும் துஆக்களில் மன்றாடலை உருவாக்க வேண்டிய பெரும் தேவை உள்ளது. அல்லாஹ் மனிதகுலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும், துஆக்கள் செய்வதிலும் நமது உரிமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் துஆ செய்ய வேண்டும்."

2024 ஜெர்மனி ஆண்டுமாநாட்டின் தருணத்தில் சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சிறப்பு துஆக்களை நோக்கி வலியுறுத்திக் கூறினார்கள். அதைக் கடைபிடிப்பதன் விளைவாக மனிதன் ஒரு பாதுகாப்பான கோட்டையில் வாழ்ந்தவாறு தன்னைக் காத்துக் கொள்ள முடியும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: "நான் இங்கு ஒரு விஷயத்தை வலியுறுத்தி விடவும் விரும்புகிறேன். ஹஸ்ரத் மூன்றாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் ஒரு கனவு இருந்தது. அவர்களுக்கு ஒரு சான்றோர் (கனவில்) இவ்வாறு கூறினார்: ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும், பெரியவர்கள் ஒவ்வொருவரும் 200 முறை சுப்ஹானல்லாஹி.....முஹம்மத் என்ற இந்த துரூத் ஷரீ∴ப் ஓதினால், பிறகு, அவர்கள் கூறினார்கள்: நடுபட்ட வயதில் உள்ளவர்கள், அதாவது, 15 முதல் 25 வயது வரை உள்ளவர்களும் குறைந்தபட்சம் 100 முறை ஓத வேண்டும். பிள்ளைகளும் குறைந்தபட்சம் 33 முறை ஓத வேண்டும். சிறு வயது குழந்தைகளுக்கு அவர்களுடைய தாய் தந்தையர் மூன்று, நான்கு முறை இதை ஓத வைக்க வேண்டும். அத்துடன் 100 முறை இஸ்தி∴க்∴பாரும் செய்ய வேண்டும். அஸ்தக்∴பிருல்லாஹ ரப்பி.....இலைஹி. இவ்வாறே நான் இதையும் இணைக்கிறேன்: ரப்பி குல்லு ஷய்யின்.........வர்ஹம்னீ என்ற துஆவையும் 100 முறை மீண்டும் மீண்டும் ஓதுங்கள். இந்த நாள்களில் குறிப்பாகவும், பொதுவாக நிரந்தரமாகவும் செய்யுங்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்குக் கனவில் இதுதான் காட்டப்பட்டது. அதாவது, நீங்கள் இதை செய்தால், நீங்கள் ஒரு பாதுகாப்பான கோட்டையில் பாதுகாப்பாக ஆகி விடுவீர்கள். அங்கு

## அஹ்மதிகளிடம் அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களின் வேண்டுகோள்!

**இந்த துஆவை செய்வீர்களாயின், ஒரு பாதுகாப்பான கோட்டையில் நுழைந்து விடுவீர்கள். அங்கு ஷைத்தானால் ஒருபோதும் நுழைய முடியாது.** (குத்பா ஜுமுஆ 23.08.2024)

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ
اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

*(ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ ஸுப்ஹானல்லாஹில் அழீம் அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதி(ன்)வ் வஆலி முஹம்மத்)*

**DAILY 200 TIMES**

பொருள்: அல்லாஹ் தூயவன். அனைத்துப் புகழுக்கும் உரியவன் அவனே. மகத்துவமிக்க அல்லாஹ் தூயவன். அல்லாஹ்வே! முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரது குடும்பத்தினர் மீதும் பெரும் கருணையையும், அருளையும் இறக்குவாயாக.

اَسْتَغْفِرُ اللّٰهَ رَبِّيْ مِنْ كُلِّ ذَنْبٍ وَّاَتُوْبُ اِلَيْهِ

*(அஸ்தக்ஃபிருல்லாஹ ரப்பி மின் குல்லி ஸ(ன்)ம்பி(ன்)வ் வ அதூபு இலைஹி)*

**DAILY 100 TIMES**

பொருள்: நான் என் இறைவனிடம் என் பாவங்களுக்காக பாவமன்னிப்புக் கோருகிறேன். அவன் பக்கமே திரும்புகிறேன்.

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

*(ரப்பி குல்லு ஷய்யின் ஹாதிமுக ரப்பி ஃபஹ்ஃபழ்னீ வன்ஸுர்னீ வர்ஹம்னீ)*

**DAILY 100 TIMES**

பொருள்: என் இறைவா! ஒவ்வொன்றும் உனக்குத் தொண்டாற்றுகிறது. என் இறைவா என்னைப் பாதுகாப்பாயாக. எனக்கு உதவி புரிவாயாக. என் மீது கருணை காட்டுவாயாக.

ஷைத்தானால் ஒருபோதும் நுழைய முடியாது. அந்தக் கோட்டையின் சுவர்கள் இரும்பினால் ஆனவையாகும். அதன் சுவர்கள் வான் வரை எட்டியுள்ளன. எனவே, ஷைத்தான் தாக்குதல் தொடுக்க முடிந்த எந்தத் துளையும் (எஞ்சி) இருக்காது. (1968 ஆம் ஆண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மஜ்லிஸ் முஷாவிரத் அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது. ஏப்ரல் 5,6,7 1968 பக்கம் 233)

ஷைத்தான் ஒவ்வொரு சாக்குப் போக்கைக் கொண்டு, ஜமாஅத் என்கிற வகையிலும், ஒட்டுமொத்தமாக, பொதுவாக உலகத்திலும் நம் மீது தாக்குதல் தொடுப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கும் இந்த நாள்களில், இதிலிருந்து தப்பிப்பதற்கு ஒரே வழிதான் உள்ளது. அதாவது, குறிப்பாக, துஆக்களில் அழுத்தம் கொடுங்கள். மேலும், ஜல்ஸாவின் நாள்களில் மட்டுமல்ல. மாறாக, நிரந்தரமாக இந்த துரூது ஷரீ∴ப் மற்றும் திக்ரே இலாஹி எனும் இந்த மீண்டும் மீண்டும் செய்யும் துஆக்களை உங்கள் வாழ்வின் அங்கமாக்கிக் கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் பிள்ளைகள், பெரியவர்கள், பெண்கள், ஆண்கள் என அனைவரும் அதில் கவனம் செலுத்த வேண்டும். (ஆகஸ்ட் 23, 2024 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து...)

மேலும், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இன்னாரு குத்பாவில் கூறுகிறார்கள்: "உங்கள் அனைவருக்கும் தெரியும்! உலகத்தின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே செல்கிறது. அழிவின் பக்கம் செல்கின்றன. அமெரிக்காவும் வல்லரசுகளும் நீதியுடன் செயல்பட விரும்பவில்லை. போர் விரிவடைந்து கொண்டே செல்கிறது. மேலான அல்லாஹ் அஹ்மதிகளையும் குற்றமற்றவர்களையும் இதன் அச்சமூட்டக்கூடிய மற்றும் தீய தாக்கங்களிலிருந்து காப்பாற்றுவானாக! இதற்காக நாம் அல்லாஹ்வுடன் தொடர்பை அதிகரித்துக் கொள்ள வேண்டி வரும். துஆக்களின் பக்கம் மிக அதிகம் கவனம் செலுத்த வேண்டி வரும். ஒவ்வோர் அஹ்மதியும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். (அக்டோபர் 4, 2024 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து...)

உலகம் அழிவை நோக்கி செல்வதற்கு, இறுதி காலத்தின் இமாம் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை நிரகரிப்பதும் மிக முக்கியமான ஒரு காரணம் ஆகும். எனவே, மக்களை ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பைஅத்தின் பக்கம் அழைப்பதற்கான தேவையுள்ளது. இது தொடர்பாக ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

"உலகில் முஸ்லிம்களின் பொதுவான நிலைமை -களுக்காகவும் துஆ செய்யுங்கள். இந்த மக்களும் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு தமது கண்ணியத்தை மீண்டும் பெற முடியும். உலகில் போருக்கான பொதுவான சூழல் உருவாகிறது. அதற்காகவும் துஆ செய்யுங்கள். எந்தப் பக்கம் உலகம் செல்கிறதோ இந்தப் போர் இப்பொழுது கண்டிப்பாக நடந்தே தீரும் என்று தோன்றுகிறது. ஆனால், அல்லாஹுத்தஆலா அஹ்மதிகள் ஒவ்வொருரையும் குற்றமற்றவர்கள் ஒவ்வொருவரையும் இதன் தீங்கிலிருந்து பாதுகாத்து வைப்பானாக!" (ஜுன் 28, 2024 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து...)

இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டலைக் கூறியே எனது கோரிக்கைகளை நிறைவு செய்ய விரும்புகிறேன். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

"உலகம் மிகவும் அச்சுறுத்தும் அழிவின் பக்கம் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. முஸ்லிம்களிடமும் நீதியில்லை; முஸ்லிம் அல்லாதவர்களிடமும் நீதியில்லை, நீதியில்லாதது மட்டுமின்றி, அதையும் தாண்டி எல்லா அநீதிகளின் எல்லைகளைத் தொடுகிறார்கள். எனவே, இத்தகைய நேரத்தில் உலகத்தின் கண்களைத் திறப்பது மற்றும் அநீதிகளிலிருந்து தவிர்ந்திருப்பதன் பக்கம் கவனமூட்டி அழிவின் குழியில் விழுவதிலிருந்தும் காப்பதற்கான பங்களிப்பை அஹ்மதிய்யா ஜமாஅத்தால் மட்டுமே அளித்திட முடியும்.

இதற்காக நம்மில் ஒவ்வொருவரும் தத்தமது வட்டத்தில் செயல் அளவிலான முயற்சியை செய்ய வேண்டிய அதே வேளையில், அங்கு செயல் ரீதியிலான முயற்சியுடன் சேர்த்து நாம் துஆக்கள் பக்கமும் அதிகம் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. முஸ்லிம் நாடுகளின் நீதியின்மை மற்றும் செயல்களின் விளைவுகள் அவர்களை உட்புற குழப்பங்களில் ஆழ்த்தியிருக்கின்ற அதே வேளையில், வெளிப்புற ஆபத்துகளும்கூட மிகவும் வேகமாக அவர்கள் மீது சுற்றித் திரிகின்றன. அவர்களுடைய கதவுகள் வரை வந்தடைந்து விட்டன என்றே சொல்ல வேண்டும்.

வெளிப்படையில் பார்க்கும்போது, பெரிய போர் வாயைத் திறந்து கொண்டு நிற்பதாகத் தெரிகிறது. உலகம் அதன் விளைவுகள் குறித்து அறியாமல் இல்லை என்றாலும், நிச்சயம் கவலைப்படாமல் இருக்கிறது. எனவே, இத்தகைய நிலையில் முஹம்மதிய மஸீஹின் அடிமைகள் தங்களது பங்களிப்பை நிறைவேற்றியவாறு உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக துஆக்களுக்கான உரிமையை நிறைவேற்றுவதற்கு மிகவும் அதிக தேவை உள்ளது. மேலான அல்லாஹ் நம்மை அதற்கான உரிமையை நிறைவேற்றுபவர் -களாக ஆக்குவானாக! மேலும், உலகை அழிவிலிருந்து காப்பாற்றிடுவானாக! ஆமீன். (ஏப்ரல் 26, 2013. அல் ∴பஸ்ல் இன்டர்நேஷனல் மே 17, 2013 வெளியீடு. பக்கம்)

எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! ஆமீன்!

'எதை நீங்கள் உங்களுக்காக விரும்புகின்றீர்களோ அதை மற்றவர்களுக்காகவும் விரும்புங்கள்' என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த போதனையின் அடிப்படையில் ஒவ்வோர் அஹ்மதியின் கடமை என்னவென்றால், இந்த தப்லீகை, இந்த தூதுச் செய்தியை அன்பு, நேசம் மற்றும் அமைதியோடு இருப்பதற்கான இஸ்லாத்தின் தூதுச் செய்தியை, சமாதானம் மற்றும் சமரசத்திற்கான இந்தத் தூதுச் செய்தியை உலகிற்கு எடுத்துக் கூற வேண்டும். மேலும் இந்த விஷயத்தைப் பரப்ப வேண்டும். இதுவே மனிதன் நிலைத்திருப்பதற்கான உத்திரவாதமாகும்.

# மின் விலாங்கு மீன் ஓர் இயற்கை அற்புதம்



நமது கற்பனைக்கு அப்பாற்பட்ட வழிகளில் நமக்கு உதவுவதற்காக நம் சொந்த உடலையே ஒரு மின்கலப் பெட்டியாக (Battery Pack) மாற்ற முடிந்தால் அது எவ்வளவு நன்றாக இருக்கும்!

இயற்கையானது அதன் கவர்ச்சிகரமான உயிரினங்-களால் நம்மை ஆச்சரியப்படுத்துவதற்கு அளவே இல்லை. கத்தி மீன் குடும்பத்தின் மின்சார மீன்களும் இதற்கு சாட்சி பகர்கின்றன. இவற்றில், மின்விலாங்கு மீன்கள் (Electric Eels) இன்று வரை கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் மிக சக்தி வாய்ந்தவையாக தனித்து நிற்கின்றன.

மின்விலாங்கு மீன்கள் விலங்கு இராஜ்ஜியத்தின் மிகவும் அற்புதமான உயிரினங்களில் ஒன்றாகும். இந்த நன்னீர் மீன்கள் மின் தூண்டுதல்களை உருவாக்குவதற்கான தனித்துவமான திறனைக் கொண்டுள்ளன, மின்விலாக்கள் எதிரிகளுக்கு எதிராக தம்மை காத்துக் கொள்வதற்காகவும், போக்குவரத்திற்காகவும், தொடர்பு கொள்வதற்கும் இந்த மின்தூண்டுதல்களைப் பயன்படுத்துகின்றன.

புதிராக, மின்விலாங்கு மீன்களை உண்மையிலேயே குறிப்பிடத்தக்கதாக மாற்றுவது அவற்றின் மின்சார அதிர்ச்சிகளின் (Electric Shock) சக்தியாகும். இந்த அதிர்ச்சிகள் மனிதர்களின் உயிரை பறிக்கும் அளவிற்கு ஆபத்தானவை அல்ல என்றாலும், அவை இரையை திகைப்பூட்டுவதற்கோ அல்லது எதிரிகளைத் தடுப்பதற்கோ போதுமான வலிமை உடையதாகும். உண்மையில், மின்விலாங்கு மீன்கள் 860 வோல்ட்ஸ் வரை அதிர்ச்சிகளை உருவாக்கும் திறன் கொண்டவையாகும். இவை பூமியின் மிகவும் மின்சக்தி வாய்ந்த விலங்குகளில் ஒன்றாகும்.

மின்விலாங்கு மீன்களின் வளரும் திறன் அபாரமானது. சில 8 அடிக்கு மேல் நீளத்தை எட்டுகின்றன. மேலும் 44 பவுண்டுகளுக்கு மேல் எடையுள்ளவை. அவை நீண்ட, உருளை உடல்கள் மற்றும் தட்டையான தலைகளைக் கொண்டுள்ளன, அவற்றின் தோல் பொதுவாக மேலே ஒரு அடர் பச்சை அல்லது சாம்பல் நிற சாயலைக் காட்டுகிறது, அவற்றின் அடிப்பகுதியில் மஞ்சள் நிறம் கலந்துள்ளது.

மின்விலாங்கு மீன்களின் முழு உடலும் எலக்ட்ரோ-சைட்டுகள் எனப்படும் சிறப்பு செல்களால் மூடப்பட்டிருக்கும். இவை தொடர்ச்சியான மின்சார உறுப்புகளில் அமைக்கப்-பட்டுள்ளன. செயல்படுத்தப்படும் போது, இந்த செல்கள் மின்னோட்டத்தை உருவாக்குகின்றன. இது மின்விலாங்கு மீன்கள் உடலின் வழியாகவும் சுற்றியுள்ள நீருக்கு வெளியேயும் பாய்கிறது. அதன் மின் திறன்களைப் பயன்படுத்தி, இந்த உயிரினம் மறைந்துள்ள இரையின் இயக்கங்களைத் தூண்டுவதன் மூலம் அவற்றின் இருக்கும் இடத்தைக் கண்டறிய முடியும். மேலும் ஏற்கனவே இயக்கத்தில் இருக்கும் இரையை அசைய விடாமல் ஆக்கி விடும்.

மின்விலாங்கு மீன்கள் மின்துடிப்புகளை (Electric Pulses) உருவாக்கி வெளியேற்றுவதன் மூலம் தொடர்பு கொள்கின்றன. இந்தத் துடிப்புகளின் காலஅளவு அவற்றுக்கு இடையேயான நேர இடைவெளிகளை விட குறுகியதாகும். துடிப்புகளின் அதிர்வெண் மற்றும் வலிமை ஆண் மற்றும் பெண் மின்விலாங்கு மீன்களிடையே வேறுபடுகின்றன. இவை மனித கண்டுபிடிப்புகளைத் தாண்டிய வழிகளில் மின்சாரத்தை பயன்படுத்தும் திறனைக் கொண்டுள்ளன. வாண்டர்பில்ட் பல்கலைக்கழகத்தின் உயிரியல் அறிவியல் பேராசிரியர் கென்னத் சி. கேடானியா, மின்விலாங்கு மீன்கள் மின்சாரத்தைப் பயன்படுத்தும் விதத்தைப் பார்க்கும்போது இயற்கை உலகின் பிரமிக்க வைக்கும் அதிசயங்களுக்கு எதிரில் மனித கண்டுபிடிப்புகள் ஒன்றுமல்ல என்பதை நினைவூட்டக் கூடியதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

இப்போது, இயற்கையின் அசாதாரண நிகழ்வுகளைப் பற்றி சிந்திக்க சிறிது நேரம் ஒதுக்குங்கள். இத்தகைய அதிசயங்களின் இருப்பு வெறும் தற்செயல் நிகழ்வாக இருக்க முடியுமா?

(நன்றி: ரிவியூ ஆ.்.ப் ரிலிஜியன்ஸ், அக்டோபர் 2023)

## ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து எஸ்ஸென்ஸ் ஆ:ப் இஸ்லாம்

2

தொகுதி 1

# இஸ்லாம் உண்மையான உயிருள்ள மார்க்கம்

அதிகாரம் 1


**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்**

### இஸ்லாத்தின் தேவை:

இஞ்சீலில் கூறப்பட்ட சில விஷயங்களே மார்க்கம் என்று கருதுவது முட்டாள்தனமே ஆகும். மனிதனின் முழுமைத்தன்மைக்கு தேவையான அனைத்துமே மார்க்கத்தின் வட்டத்திற்குள் அடங்கி விட்டன. மனிதனை அவனது தான்தோன்றித்தனமான நிலையிலிருந்து உண்மையான மனிதத்துவம் என்ற நிலைக்கு இட்டுச் செல்லவும், மனிதத்துவம் என்ற நிலையிலிருந்து ஒரு ஞான வாழ்வு என்ற நிலைவரை இட்டுச் செல்லவும், பின்னர் ஞானமிக்க வாழ்வு என்ற நிலையிலிருந்து இறைவனுக் -காகவே ஆகிவிட்ட வாழ்க்கை என்ற நிலை வரை இட்டுச் செல்லவும் தேவையான அனைத்து விஷயங்களையும் மார்க்கம் உள்ளடக்கியுள்ளது. (கிதாபுல் பரிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 89)

மனிதத்தன்மை என்ற மரத்தினை முழுமையாக பேணி வளர்ப்பதற்கு தேவையானவற்றை இஞ்சீல் வழுங்கவில்லை என்பதில் சந்தேகமில்லை. நாம் இவ்வுலகில் பல்வேறு ஆற்றல்களுடன் அனுப்பப்பட்டுள்ளோம். ஒவ்வொரு ஆற்றலையும் அதற்குரிய தருணத்தில் பயன்படுத்த வேண்டும். இஞ்சீல் சாந்த குணத்தையும் மென்மைப் பண்பையும் மட்டுமே வலியுறுத்திக் கூறுகிறது. சாந்த குணத்தையும் மன்னிப்பையும் அவற்றிற்குரிய தருணங்களில் பயன்படுத்தினால் அவை நற்பண்புகளே ஆகும். ஆனால் அவற்றை ஒவ்வொரு தருணத்திலும் பயன்படுத்துவது பெரிதும் தீமை பயப்பதாகும். பல்வேறு சுபாவங்கள் விரவிக் கிடக்கும் நம்முடைய பண்பாட்டு வாழ்க்கை முறை எதிர்பார்ப்பது என்னவெனில், நாம் நம்முடைய ஆற்றல்கள் அனைத்தையும் நமது விருப்பப்படி அதனதன் தருணத்தில் பயன்படுத்த வேண்டும். சில தருணங்களில் நமக்கு துன்பமிழைத்த ஒருவருக்கு மன்னிப்பும், சகிப்புத் தன்மையும் பௌதிகமாகவும் ஆன்மிகமாகவும் பயன் தரும் என்பது உண்மையே ஆகும். மற்ற தருணங்களில் அப்பண்புகளைப் பயன்படுத்துவது குற்றவாளியை மேலும் விஷமத்தனம் செய்யவும், அதிகமாக துன்பமிழைக்கவும் ஊக்குவித்து விடும்.

நம்முடைய ஆன்மிக வாழ்க்கை, நம்முடைய பௌதிக வாழ்கைக்கு பெரிதும் ஒத்திருக்கின்றது. ஒரே வகை உணவையும் மருந்துகளையும் உட்கொள்வதால் நமது




உடல் ஆரோக்கியம் கெட்டு விடும் என்பது நமது அனுபவமாகும். குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு குளிர்ந்த உணவுகளை மட்டும் உட்கொண்டு, சூடான பதார்த்தங்களை முற்றிலும் தவிர்த்து வந்தால் பக்கவாதம், பார்க்கின்ஸன் நோய், வலிப்பு போன்ற சில நோய்களுக்கு நாம் இரையாகி விடுவோம். மாறாக, சூடான உணவு வகைகளை மட்டுமே உட்கொண்டு, தண்ணீரையும் இளஞ்சூட்டிலே அருந்தி, குளிர்ந்த உணவுகளை முற்றிலுமாக தவிர்த்து வந்தால், வேறு சில நோய்களுக்கு நாம் ஆளாகி விடுவோம். ஆகையால், நமது உடல் ஆரோக்கியத்தை பராமரிப்பதற்கு சூட்டிற்கும் குளிருக்குமிடையிலும், கடுமைக்கும் மென்மைக்கும் இடையிலும், இயக்கத்திற்கும் ஓய்விற்குமிடையிலும் ஒரு சமநிலையை நாம் பேண வேண்டும். நாம் ஆன்மிக ஆரோக்கியத்திற்காகவும் இதே விதியை நாம் பின்பற்ற வேண்டும். இறைவன் நம்மிடம் தீய ஆற்றல் எதையும் வைக்கவில்லை. எந்த ஆற்றலும் அதனளவில் தீமையாக இருப்பதில்லை. அந்த ஆற்றலை தவறுதலாக பயன்படுத்துவதே தீமையாகும். உதாரணமாக, பொறாமை என்பது தீயதாகும். ஆனால் அதே பண்பை ஒரு நல்ல குறிக்கோளுக்காக பயன்படுத்தினால், அதாவது நன்மையில் போட்டியிடுவதற்காக பயன்படுத்தினால், அது உயர்ந்த ஒழுக்க குணமாகி விடுகிறது. இதுவே எல்லா ஒழுக்க குணங்களின் நிலையாகும். தவறாக பயன்படுத்துவதால்

அவை தீமை பயப்பதாக ஆகி விடுகின்றன. நடுநிலையுடன் தக்க தருணத்தில் பயன்படுத்தபடும் போது அவை நன்மை பயப்பவையாகி விடுகின்றன.

எனவே, மனிதத்துவம் என்ற மரத்தின் பிற அனைத்து கிளைகளையும் வெட்டிவிட்டு, மன்னிப்பு, சகிப்புத் தன்மையின் மீது மட்டுமே முழு முக்கியத்துவத்தையும் வழங்குவது தவறே ஆகும். எனவேதான் இந்த போதனை அதன் குறிக்கோளில் தோல்வியடைந்துள்ளது. கிறித்துவ அரசுகள் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக சட்டங்கள் இயற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. மனிதத்துவத்தின் முழுமையை தற்போதைய இஞ்சீல் கொண்டு வர முடியாது. சூரியன் உதிக்கும் போது, நட்சத்திரங்கள் மங்கலாகி பின்னர் பார்வையிலிருந்து முற்றிலும் மறைந்து விடுவதைப் போன்றே திருக்குர்ஆனுடன் ஒப்பிடும்போது இஞ்சீலின் நிலையும் உள்ளது. (கிதாபுல் பரிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 13 பக்கம் 66-67)




உலகிலுள்ள மார்க்கங்களைக் கவனித்துப் பார்க்கும் பொழுது இஸ்லாத்தைத் தவிர பிற மார்க்கங்கள் அனைத்தும் ஏதாவது தவறுகளைக் கொண்டிருப்பதை அறியலாம். உண்மையில் அம்மார்க்கங்கள் அவற்றின் ஆரம்பம் முதலே பொய்யானவையாக இருந்தன என்பது இதற்கு காரணமல்ல. மாறாக, இஸ்லாம் தோன்றிய பின் இறைவன் அம்மார்க்கங்-களுக்கு உதவி செய்வதை நிறுத்தி விட்டான் என்பதே இதற்குக் காரணமாகும். பிற மார்க்கங்கள் அனைத்தும் சுத்தம் செய்து, பண்படுத்தி நீர்பாய்ச்ச எவ்வித ஏற்பாடுமற்ற தோட்டக்காரனில்லாத கைவிடப்பட்ட தோட்டத்தை போலாகி விட்டன. எனவே காலப்போக்கில் அவை சீர்கெட ஆரம்பித்தன. கனி தரும் மரங்கள் காய்ந்து, அவற்றிற்குப் பதிலாக முட்செடிகளும் புதர்களும் பரவின. மார்க்கத்தின் வேரான ஆன்மிகம் அழிந்து வறண்ட சொற்கள் மட்டுமே எஞ்சி நின்றன. இஸ்லாத்திற்கு இவ்வாறு நேருவதை இறைவன் அனுமதிக்கவில்லை. ஏனெனில் இத்தோட்டம் என்றென்றும் செழிப்பாக இருக்க வேண்டுமென இறைவன் விரும்பினான். எனவே ஒவ்வொரு நூற்றாண்டிலும் அதற்கு நீர்பாய்ச்சி அது வறண்டு விடாமல் காத்திட ஏற்பாடு செய்தான். ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இதை சீர்திருத்தும் பொருட்டு இறையடியார் ஒருவர் நியமிக்கப்படும் போதெல்லாம் அறிவற்ற மக்கள் அவரை எதிர்த்தனர். எவை அவர்களின் பழக்க வழக்கமாகவோ சம்பிரதாயமாகவோ மாறிவிட்டதோ அவற்றை சீர்திருத்தம் செய்வதை அவர்கள் விரும்பவில்லை. இருந்த போதிலும், இறைவன் தன் செயல்முறையை விட்டுவிடவில்லை. இந்த இறுதி காலத்தில் கூட, நேர்வழிக்கும் வழிகேட்டிற்கும் இடையில் நடக்கும் இறுதிப் போரில் முஸ்லிம்களின் கவனமின்மையைக் கண்டு, இறைவன் தன் வாக்குறுதியை நினைவுகூர்ந்து, இஸ்லாத்திற்குப் புத்துயிர் ஊட்டுவதற்கான ஏற்பாட்டினை செய்தான். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திற்குப் பிறகு பிற மார்க்கங்கள் புத்துயிர் அளிக்கப்படவில்லை. அவை மரணித்து விட்டன. ஆன்மிக உயிர் அவற்றில் இல்லை. மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு சுத்தம் செய்யப்படாமல் அழுக்கேறி போன ஆடையைப் போன்று அவற்றுள் ஏராளமான தவறுகள் படிந்து விட்டன. ஆன்மிகத் தொடர்பற்ற கீழ்த்தர வாழ்வின் கறைகளிலிருந்து தூய்மை பெறாதவர்கள் இம்மார்க்கங்களை பாழாக்கி விட்டனர். எந்த அளவுக்கெனில் அம்மார்க்கங்கள் அவற்றின் அசல் வடித்தை சிறிதும் ஒத்திருக்கவில்லை.

கிறித்தவ மார்க்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் ஆரம்பத்தில் அது எவ்வளவு தூயதாக இருந்தது! திருக்குர்ஆனின் போதனைகளுடன் ஒப்பிடும் போது இயேசு வழங்கிய போதனைகள் முழுமையானவையாக இருக்க -வில்லை. ஏனெனில் முழுமையான போதனைக்கான காலம் அப்போது வந்திருக்கவில்லை. அப்போதைய மக்கள் அதனை தாங்கிக் கொள்ளும் அளவிற்கு பலம் பெற்றிருக்கவில்லை. இருந்தபோதிலும் இயேசுவின் போதனைகள் அந்தக் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப சிறந்த போதனைகளாகவே இருந்தன. எந்த இறைவன் பக்கம் தவ்ராத் வழிகாட்டியதோ, அதே இறைவன் பக்கமே அவை வழிகாட்டின. ஆனால் இயேசுவுக்குப் பிறகு கிறித்தவர்களின் இறைவன் தவ்ராத்தில் எங்குமே குறிப்பிடப்படாத மற்றொரு இறைவனாக ஆகி விட்டான். அவன் இஸ்ரவேலின் சந்ததியினர்க்கு தெரிந்திராத ஓர் இறைவனாவான். இந்த புதிய இறைவன் மீதான நம்பிக்கை தவ்ராத்தின் முழு அமைப்பையும் சீர்குலைத்து விட்டது. பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்கும் உண்மையான மீட்பினைப் பெறுவதற்கும் தவ்ராத்தில் இடம் பெற்றிருந்த அனைத்து வழிகாட்டலையும் அது சீர்குலைத்து விட்டது. ஒரு தூய வாழ்வு கிடைக்காமல் செய்து விட்டது. தற்போது இரட்சிப்பும், பாவத்திலிருந்து மீட்பும் இயேசுவை இறைவன் என்றும் அவர் மனிதகுலத்தின் இரட்சிப்பிற்காக சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டார் என்றும் நம்புவதை சார்ந்தவையாகி விட்டன. தவ்ராத்தின் நிரந்தர சட்டங்கள் பல ரத்து செய்யப்பட்டன. இவ்வாறு கிறித்துவ மார்க்கம் எந்த அளவு மாறிவிட்டதெனில், இயேசுவே மீண்டும் உலகிற்கு வந்தாலும் அவராலும் கூட இதனை அடையாளம் காண முடியாது.

தவ்ராத்தில் உள்ள கட்டளைகளை மிகவும் கண்டிப்பான முறையின் பேண வேண்டுமென உறுதியாக கட்டளையிடப்பட்டிருந்த அம்மக்கள், அவ்வேதத்தின் கட்டளைகளை ஒரேடியாக கைவிட்டு விட்டனர் என்பது மிகவும் வியப்பிற்குரிய ஒரு விஷயமாகும். உதாரணமாக, தவ்ராத்தில் விலக்கப்பட்டிருக்கும் பன்றி இறைச்சியை நான் உங்களுக்கு அனுமதிக்கிறேன் என்றோ, தவ்ராத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ள விருத்தசேதனத்தை நான் உங்களுக்கு ரத்து செய்கிறேன் என்றோ இஞ்சீலில் எங்குமே

கூறப்படவில்லை. ஆனால் இவை எல்லாம் செய்யப்பட்டன. இயேசுவால் ஒருபோதும் கூறப்படாதவை. மார்க்கத்தின் அங்கமாகி விட்டன. எனினும் இஸ்லாம் என்ற முழு உலகிற்குமுரிய மார்க்கத்தை நிலைநாட்டுவது இறைவனின் திட்டமாக இருந்தது. எனவே கிறித்தவத்தின் சீர்கேடு இஸ்லாத்தின் தோற்றத்திற்கு ஓர் அடையாளமாக இருந்தது.

இஸ்லாம் தோன்றுவதற்கு முன் இந்து மார்க்கமும் சீர்குலைத்திருந்தது என்பதும் இந்தியா முழுவதும் பொதுவாக சிலைவணக்கம் காணப்பட்டது என்பதும் தெளிவான ஒன்றாகும். இம்மார்க்கத்தின் சீர்குலைவின் ஒரு பகுதியே, தன் பண்புகளை வெளிப்படுத்த எப்பொருளின் தேவையுமற்றவனாக இருக்கும் இறைவன் பிரபஞ்சத்தைப் படைக்க மூலப் பொருள்களின் தேவையுடையவனாக இருக்கிறான் என்ற ஆரியர்களின் கூற்றாகும். இந்த தவறான கொள்கை, எல்லா மூலத்துகள்களும் எல்லா ஆன்மாக்களும் அழியாதவை, படைக்கப்படாதவை என்ற மற்றொரு பொய்யான கொள்கைக்கு வித்திட்டது. அவர்கள் இறைப்பண்புகளை ஆழ்ந்து சிந்திதித்திருந்தால், இவ்வாறு அவர்கள் கூறியிருக்க மாட்டார்கள். ஏனெனில், படைத்தல் என்ற அவனது நிலையான பண்பை செயல்படுத்த இறைவன் மனிதனைப் போன்று மூலப்பொருளின் தேவையுடையவனாக இருப்பின், கேட்டல், பார்த்தல் என்ற பண்புகளின் விஷயத்தில் மனிதனைப் போன்று தேவையுடையவன் அல்லன் என்று எவ்வாறு கூற முடியும். காற்றின் துணையின்றி மனிதனால் கேட்க முடியாது. ஒளியின் துணையின்றி மனிதனால் பார்க்க முடியாது. அப்படியானால் இறைவனும் கேட்கவும் பார்க்கவும் காற்று மற்றும் ஒளியின் தேவையுடையவனா? அவ்வாறில்லை எனில், அவன் படைத்தல் என்ற அவனது பண்பினை வெளிப்படுத்தவும் மூலப்பொருள்களின் தேவையற்றவன் என்பதில் உறுதி கொள்ளுங்கள். அவனது பண்புகளுள் ஏதாவது ஒன்றினை வெளிப்படுத்த அவன் பொருட்களின் தேவையுடையவன் என்ற கொள்கை முற்றிலும் பொய்யான கொள்கையாகும். மனித பலவீனங்களை இறைவனுக்கு கற்பிப்பது மிகப்பெரும் தவறாகும். உதாரணமாக, அவன் ஒன்றுமற்றதிலிருந்து எதையும் படைக்க முடியாது என்று கருதுவது மனிதனின் இருப்பு எல்லைக்குட்பட்டது. இறைஇருப்போ எல்லையற்றது. அவனது இருப்பின் ஆற்றலினால் மற்றொன்றை அவனால் படைக்க முடியும். இதுவே இறைத்தன்மையின் சாராம்சமாகும். அவன் தனது எந்த பண்பினை வெளிப்படுத்தவும் அவன் எந்தப் பொருளையும் சார்ந்திருப்பதில்லை. அவ்வாறிப்பின் அவன் இறைவனாக இருக்க முடியாது. அவனை எதுவும் தடுக்க முடியாது. அவன் வானத்தையும் பூமியையும் ஒரு நொடியில் படைக்க நாடினால், அவனால் அதை செய்ய முடியும். இந்துக்களில், அறிவுடன் ஆன்மிகத்தையும் பெற்றிருந்த -வர்கள் வறண்ட வாதங்களில் சிக்கியிருந்ததில்லை. தற்கால ஆரியர்கள் இறைவனைப் பற்றி கூறுகின்ற கொள்கை அவர்களிடம் என்றுமே இருந்ததில்லை. இது முற்றிலும் ஆன்மிகமற்ற தன்மையின் விளைவாகும். இவ்வனைத்து சீர்கேடுகளும், அவற்றுள் சில குறிப்பிடக் கூட முடியாத அளவிற்கு மனித தூய்மைக்கு எதிரானவையாகும். இஸ்லாத்தின் தேவையை வலியுறுத்தும் அடையாளங்கள் ஆகும். இஸ்லாம் தோன்றுவதற்கு சற்று முன்னர் எல்லா



மார்க்கங்களும் சீர்குலைந்து ஆன்மிகத் தன்மையை முற்றிலும் இழந்திருந்தன என்பதை அறிவுடையவர்கள் ஒப்புக் கொள்வர். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மாபெரும் சீர்திருத்தவாதியாக தோன்றி மறைந்து போன உண்மைகளை மீட்டுத்தந்தார்கள். அவர்கள் முழு உலகையும் இருள் சூழ்ந்திருக்கக் கண்டார்கள். பிறகு அவர்களின் தோற்றத்தினால் அந்த இருள் ஒளியாக மாறியது. இந்தப் பெருமையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வேறு எந்த நபிக்கும் பங்கில்லை. (லெக்சர் சியால்கோட், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 203-206)

## இஸ்லாத்தின் உண்மை நிலை:

முதலாவதாக, இஸ்லாத்தின் உண்மை நிலை என்ன என்பது பற்றியும், அந்த உண்மை நிலையை அடைவதற்கான வழிகள் யாவை என்பது பற்றியும், அந்த உண்மை நிலையைப் பின்பற்றுவதால் விளையும் கனிகள் குறித்தும் எடுத்துரைப்பது அவசியமாகும். ஏனெனில் இந்த அறிவு பல புதிர்களைப் புரிந்து கொள்வதற்கு அவசியமாகும். முஸ்லிம்களில் உள்ள நமது எதிரிகள் இவ்விஷயங்களை கவனத்துடன் படிக்க வேண்டும். இதனால் அவர்களுக்கு பெரும்பலன் கிடைக்கும். ஏனெனில் அவர்களின் உள்ளங்களில் அலை மோதும் ஏராளமான சந்தேகங் -களுக்கான காரணம், அவர்கள் இஸ்லாத்தின் நிறைவான முழுமையான உண்மை நிலையையும் அதன் கனிகளையும் கூர்ந்து சிந்திக்க தவறியதேயாகும். மார்க்கத்தின் எதிரிகள் கூட இவற்றைப் படிப்பதால் பெரிதும் பயனடைவர். அவர்கள் மார்க்கம் என்றால் என்ன என்றும், அதன் உண்மையான அடையாளங்கள் எவை என்பதையும் அறிந்து கொள்வர்.

அரபி சொல் வழக்கில் இஸ்லாம் என்றால், ஒரு பேரத்தை முடிப்பதற்கு மன நிறைவோடு செலுத்தப்படும் பணம் அல்லது ஒருவரிடம் ஏதாவது ஒரு பணியை ஒப்படைத்தல் அல்லது அமைதியை விரும்புதல் அல்லது ஒரு உரிமையை, ஒரு கருத்தை விட்டு விடல் என்றெல்லாம் பொருள்படும்.

இஸ்லாம் என்பதன் பொருள் கீழ்வரும் வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவ்வாறன்று; எவர் தம்மை அல்லாஹ்விடம் முழுமையாக ஒப்படைத்து நற்செயல் செய்பவராகவும் விளங்குகிறாரோ அவருக்குரிய நற்கூலி அவருடைய இறைவனிடத்தில் உண்டு. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இருக்காது. அவர்கள் துயரமும் அடைய மாட்டார்கள்.

இதன் பொருள் என்னவெனில், முஸ்லிம் என்பவர் வல்லமை மிக்க இறைவன் வழியில் தன்னை அர்ப்பணித்து கொண்டவரே ஆவார். அதாவது, இறைவனின் திட்டங்களைப் பின்பற்றவும் அவனது திருப்தியைப் பெற்றுக் கொள்ளவும் வல்லமைமிக்க இறைவனிடம் தன்னை அர்ப்பணிக்கிறார். பின்னர், வல்லமைமிக்க இறைவனுக்காக நன்மை செய்வதில், நிலைத்து நிற்பதுடன் தனது அனைத்து ஆற்றல்களையும் அதற்காக செலவிடுகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் கொள்கை அளவிலும் செயல் அளவிலும் இறைவனுக்காகவே ஆகி விடுகிறார்.

கொள்கை அளவில் இறைவனுக்காக ஆகி விடுதல் என்பதன் பொருள், வல்லமைமிக்க இறைவனை கண்டு கொள்ளவும், அவனுக்கு அடிபணியவும், அவனது அன்பு, நேசத்தை பெற்றுக் கொள்ளவுமே, தான் படைக்கப்பட்டிருப்ப -தாகக் கருதி அதற்காக தன் இருப்பிற்கு முக்கியத்துவம் வழங்குவதாகும்.

செயல் அளவில் இறைவனுக்காக ஆகி விடுதல் என்பதன் பொருள், மனிதன் தனது அனைத்து ஆற்றல்களுடனும் தொடர்புடைய நன்மைகளை, கட்டுப்படுதல் என்ற கண்ணாடியில் தனது அன்பனின் முகத்தைக் காண்பது போன்ற பேரார்வத்துடனும், கவனத்துடனும் செய்து வருவதாகும். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி பக்கம்)

இஸ்லாத்தின் உண்மை நிலை என்பது ஒருவர் பலியிடத் தயாராக உள்ள ஆட்டைப் போன்று தனது கழுத்தை இறைவன் முன் வைத்து விடுவதும், தனது விருப்பங்களை இறை விருப்பங்களுக்கும் திருப்திக்கும் இசைய அமைத்துக் கொள்வதும், இறைவனிடத்தில் தன்னை இழந்து விடுவதும், தன் மீது ஒரு வகையான மரணத்தை ஏற்படுத்திக் கொள்வதும், இறைஅன்பின் சாயத்தை தன் மீது பூசிக்கொள்வதும்,அந்த அன்பிற்காகவே அவனுக்கு முற்றிலும் கட்டுப்படுவதும், அவன் மூலமே பார்க்கின்ற கண்களைப் பெறுவதும், அவன் மூலமே கேட்கின்ற காதுகளைப் பெறுவதும், அவனுக்காகவே ஆகிவிட்ட உள்ளத்தை உருவாக்கிக் கொள்வதும் அவனது கட்டளையினால் மட்டுமே பேசக்கூடிய ஒரு நாவினை பெறுவதுமேயாகும். இந்த கட்டத்தில் எல்லா தேடலும் முடிவடைகின்றன. மனித ஆற்றல்கள் தமது செயல்பாட்டை முழுமைப்படுத்துகின்றன. மனிதனின் அகந்தை முற்றிலும் அழிந்து விடுகிறது. அப்பொது இறைகருணை தனது உயிருள்ள வார்த்தைகள் மூலமும் பிரகாசமான ஒளியின் மூலமும் அந்த மனிதனுக்கு ஒரு புதிய வாழ்வை வழங்குகிறது. அவன் மகிழ்ச்சிகரமான இறைஉரையாடலைக் கொண்டு கண்ணியப்படுத்துகிறான். அறிவாலும் கண்களாலும் காண முடியாத ஒரு நுண்ணிய ஒளி அம்மனிதனின் உள்ளத்தை நெருங்கி விடுகிறது. இதனை திருக்குர்ஆன், நாம் அவனுக்கு (அவனது) உயிர் நாடியை விட மிக அருகில் உள்ளோம் (50:17) என்று கூறுகிறது.

இவ்வாறாக இறைவன் தனது அண்மையைக் கொண்டு மரணிக்க கூடிய மனிதனை கண்ணியப்படுத்துகிறான். பிறகு ஒரு நேரம் வருகிறது. குருட்டுத்தன்மை நீக்கப்பட்டு மனிதனின் கண்களுக்கு ஒரு நுண்ணறிவு வழங்கப்படுகிறது. அப்போது மனிதன் தனது புதிய கண்களைக் கொண்டு இறைவனை காண்கிறான். அவனது குரலை கேட்கிறான். அவனது ஒளி என்னும் போர்வையால் போர்த்தப்பட்டவனாக தன்னை பார்க்கிறான். இவ்வாறாக மார்க்கத்தின் குறிக்கோள் நிறைவடைகிறது. இறைவனைக் கண்டுணர்ந்த பிறகு மனிதன் கீழான வாழ்க்கை என்ற தனது அழுக்கான ஆடையை களைந்து விட்டு இறையொளியின் ஆடையை அணிந்து கொள்கிறான். இறைவனைக் காணவும், சுவர்க்கத்தைக் காணவும் அவன் காத்திருப்பது, மறுமையில் நிறைவேற இருக்கும் ஒரு வாக்குறுதியின் அடிப்படையில் அல்ல. மாறாக, அந்த அனுபவத்தை அவன் இவ்வுலகிலேயே பெறுகிறான். இதைக் குறித்து தூய்மைமிக்க இறைவன் இவ்வாறு கூறுகிறான்.

எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர்களிடம் நீங்கள் அஞ்சவும் வேண்டாம். கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)

இதன் பொருள் என்னவெனில், எவர்கள் தங்களின் இறைவன் எல்லா முழுமையான பண்புகளையும் கொண்டவன் என்றும் அவனது இருப்பிலும் பண்புகளிலும் அவனுக்கு இணை எவருமில்லை என்றும் உறுதியாக கூறுகிறார்களோ அவர்களின் மீது வானவர்கள் இறங்குகிறார்கள். அவர்களின் இந்த உறுதிமொழிக்குப் பிறகு அவர்கள் அதில் நிலைத்து நிற்கின்றனர். பூகம்பமோ, பேரிடரோ, மரணத்தைத் தரும் கடும் பகைமையோ அவர்களின் நம்பிக்கையை அசைத்து விட முடியாது. இறைவன் அவர்களுடன் பேசுகிறான். ஆபத்துக்களைக் குறித்தும் எதிரிகளைக் குறித்தும் அஞ்ச வேண்டாம் என்றும், கடந்த கால கஷ்டங்களை எண்ணி

## இஸ்லாம்

அரபி சொல் வழக்கில் இஸ்லாம் என்றால், ஒரு பேரத்தை முடிப்பதற்கு மன நிறைவோடு செலுத்தப்படும் பணம் அல்லது ஒருவரிடம் ஏதாவது ஒரு பணியை ஒப்படைத்தல் அல்லது அமைதியை விரும்புதல் அல்லது ஓர் உரிமையை ஒரு கருத்தை விட்டு விடுதல் என்றெல்லாம் பொருள்படும்.

வருந்த வேண்டாம் என்று அவன் அவர்களைத் தேற்றுகிறான். அவன் அவர்களுடனே இருப்பதாகவும், அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்தை அவர்கள் மகிழ்ச்சியடையும் பொருட்டு இவ்வுலகிலேயே அவன் அவர்களுக்கு வழங்குவதாகவும் உறுதி அளிக்கிறான். இவையெல்லாம் சான்றுகள் இல்லாத வெற்று அறிக்கைகள் அல்ல. நிறைவேறாத வாக்குறுதிகளும் அல்ல. இஸ்லாத்தில் தோன்றிய ஆயிரக்கணக்கான நல்லடியார்கள் இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள ஆன்மிக சுவர்க்கத்தினை சுவைத்துள்ளனர். எல்லாம் வல்ல இறைவன் இஸ்லாத்தை உண்மையாக பின்பற்றுபவர்களை முன்னர் தோன்றிய நல்லடியார்களின் வாரிசுளாக ஆக்கியுள்ளான். எனவே அவர்களுக்கு வழங்கப்பட்ட அருட்கொடைகள் முஸ்லிம்களுக்கு வழங்கப்படுகின்றன. (லெக்சர் லாஹுர், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 160-161)

ஒருவர் முஸ்லிம் என அழைக்கப்படுவதற்கு அவரது அனைத்து பௌதிக மற்றும் ஆன்மிக ஆற்றல்களுடன் அவரது முழு இருப்புமே மகத்துவமிக்க இறைவனுக்காக ஆகி விட வேண்டும். மேலும் மகத்துவமிக்க இறைவன் அவரிடம் ஒப்படைத்த அமானிதங்களை மீண்டும் அசல் கொடையாளி ஆகிய இறைவனிடமே திரும்பக் கொடுத்து விட வேண்டும். அவர் கொள்கை அளவில் மட்டுமல்லாமல் செயலளவிலும் தன்னை முஸ்லிம் என்று நிரூபிக்க வேண்டும். வேறு சொற்களில் கூறுவதாயின் எவ்வாறு மனிதனின் உறுப்புகள் அவனுக்கு அடிபணிந்தவையாக உள்ளனவோ அவ்வாறே, எவர் தன்னை முஸ்லிம் என கூறிக் கொள்வாரோ அவரது கைகளும், கால்களும், உள்ளமும், மனமும், சிந்தனையும், புரிதலும், கோபமும், பரிவும், மென்மையும், அறிவும், அவரது அனைத்து பௌதிக மற்றும் ஆன்மிக ஆற்றல்களும், கண்ணியமும், செல்வமும், சவுகரியமும், மகிழ்ச்சியும், அவரது உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை தொடர்புடைய அனைத்தும் அவரது எண்ணங்களும், பயங்களும், ஆசைகளும் அனைத்துமே மகத்துவமிக்க இறைவனுக்கு அடிபணிந்தவையாகி விட வேண்டும். அவருக்கு எதுவும் அவருக்குரியதில்லை. மாறாக, மகத்துவமிக்க இறைவனுக்குரியதே என்ற நிலையை எட்டுமளவுக்கு அவரது நேர்மையின் தரம் நிரூபிக்கப்பட வேண்டும். அவரது அனைத்து உறுப்புகளும், ஆற்றல்களும் இறைபணியில் எந்த அளவு ஈடுபட வேண்டுமென்றால் அவை இறைவனின் உறுப்புகள் போன்றாகி விட வேண்டும்.

திருக்குர்ஆனின் இந்த வசனங்களை (2:113) சிந்தித்துப் பார்க்கும்போது இஸ்லாத்தின் சாராம்சமாகிய மகத்துவமிக்க இறைவனின் வழியில் வாழ்க்கையை அர்ப்பணித்தல் என்பது இரண்டு அம்சங்களை கொண்டது.

முதலாவதாக, ஒருவரின் வணக்கத்திற்குரியதும், உண்மையான இலக்கும், நேசமும் மகத்துவமிக்க இறைவனாகவே இருக்க வேண்டும். மேலும் வணக்கமும், நேசமும், அச்சமும், நம்பிக்கையும் வேறு எவருக்காகவும் இல்லாமல் இறைவனுக்காக மட்டுமே ஆகி விட வேண்டும். அவனது தூய்மை, புகழ், வணக்கம் தொடர்பான எல்லா கட்டளைகளையும், அவனால் நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லா வரம்புகளையும், எல்லா இறைத் தீர்ப்புகளையும் முழுமையாகவும் நேர்மையுடனும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த அனைத்து கட்டளைகளும், வரம்புகளும், சட்டங்களும், தீர்ப்புகளும் மிகுந்த பணிவுடன் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அவனது பரந்த ஆற்றல்களைப் போற்றவும், அவனது ஆட்சி மற்றும் அவனது இறைமையின் மகத்துவத்தை அறியவும், அவனது தயவுகள் மற்றும் அருட்கொடைகளை அடையாளம் காண வழிகாட்டவும் தேவையான எல்லா உண்மைகளையும் புரிதல்களையும் சோதித்தறிந்து கொள்ள வேண்டும்.



மகத்துவமிக்க இறைவனது வழியில் வாழ்க்கையை அர்ப்பணித்தல் என்பதன் இரண்டாவது அம்சம் என்னவெனில், அவனது படைப்பினங்களுக்கு சேவை செய்யவும், அவர்கள் மீது கருணை காட்டவும், அவர்களது கஷ்டங்களிலும் துயரங்களிலும் பங்கு பெறுவதற்காகவும் ஒருவர் தனது வாழ்வை அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பதாகும். அவர்களுக்கு சவுகரியத்தை வழங்குவதற்காக வலியை உணர வேண்டும். அவர்களுக்கு மன நிம்மதியை வழங்குவதற்காக துக்கத்தை அனுபவிக்க வேண்டும்.

இதிலிருந்து இஸ்லாத்தின் உண்மை நிலை என்பது மிகவும் உன்னதமான ஒன்று என்று தெரிகிறது. ஒருவர் தனது அனைத்து ஆற்றல்கள், பேராசைகள், திட்டங்கள் ஆகியவற்றுடன் தனது முழு இருப்பையும் இறைவனுக்காக அர்ப்பணிக்காத வரையிலும், அவரது அகந்தையிலிருந்தும் அதற்கு துணை போகும் அனைத்து இயல்புகளிலிருந்தும் முற்றிலும் விலகி இறைவழியில் காலடி எடுத்து வைக்காத வரையிலும் அவர் முஸ்லிம் என்ற பட்டத்திற்கு உரியவர் ஆக மாட்டார். ஒருவரது கவனமற்ற வாழ்வில் ஒரு முழுமையான புரட்சி ஏற்பட்டு, அவரது தீமையை தூண்டும் ஆன்மா அதன் அனைத்து பற்றுகளுடன் முற்றிலுமாக அழிக்கப்பட்டு, அவருக்கு ஒரு புதிய வாழ்க்கை தரப்படும் போது தான் அவர் ஒரு முஸ்லிம் என அழைக்கப்படுவார். அந்த புதிய வாழ்வு அவர் அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய கடமைகளை கொண்டதாக இருக்கும். அதில் படைத்தவனுக்கு அடிபணிவதும் படைப்பினம் மீது அனுதாபம் காட்டுவதையும் தவிர வேறொன்றும் இருக்காது.

படைத்தவனுக்கு அடிபணிதல் என்பதன் பொருள், அவனது கண்ணியம், புகழ் மற்றும் ஏகத்துவத்தை மேலோங்கச் செய்வதற்காக ஒருவர் எல்லா விதமான இழிவுகளையும் அவமானங்களையும் தாங்கிக் கொள்ளத் தயாராகி விட வேண்டும். அவனுக்கு கட்டுப்பட்டவாறு அவரது ஒரு கை மகிழ்ச்சியுடன் மறு கையை வெட்டி விட தயாராகி விட வேண்டும். அவனது கட்டளைகளின் மகிமை மீதான நேசமும், அவனது நேசத்தைப் பெற்றுக் கொள்ள முனைவதில் தாகமும் பாவத்தை மிகவும் வெறுக்கத்தக்க ஒன்றாக ஆகி விட வேண்டும். எந்த அளவுக்கெனில் ஒருவர் தனது முழு சக்தியுடன் தப்பி ஓடி விட நினைக்கும் ஒரு நெருப்பைப் போன்று அல்லது மரணத்தை தரும் ஒரு விஷத்தைப் போன்று அல்லது முற்றிலும் பொசுக்கி விடும் ஒரு மின்னலைப் போன்று பாவம் தென்பட வேண்டும். அவனது நேசத்தைப் பெறுவதற்கு ஒருவர் தனது அகந்தையின் அனைத்து பேராசைகளையும் விட்டு விட வேண்டும். அவனுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள எல்லா விதமான காயங்களையும் தாங்கிக் கொள்ளத் தயாராகி விட வேண்டும். இந்த உறவை நிரூபிப்பதற்காக, பிற அனைத்து உறவுகளையும் துண்டித்து விட வேண்டும்.

சக மனிதர்களுக்கான சேவை என்பதன் பொருள், அவர்களின் அனைத்து தேவைகளிலும், அதைப் போன்று அவர்கள் மீதான உண்மையான தன்னலமற்ற அனுதாபத்தின் மூலம் இறைவனே ஏற்படுத்தியிருக்கிற ஒருவருக்கொருவ -ருடனான உறவுகளிலும் அவர்கள் பயனடைய இறைவனுக்காக முயற்சித்தல் வேண்டும். இறைவன் வழங்கியுள்ள சக்தியை கொண்டு உதவி தேவைப்படுகிற அனைவருக்கும் உதவி செய்யப்பட வேண்டும். அவர்களின் இவ்வுலக மறுவுலக மேம்பாட்டிற்காக தன்னால் முடிந்ததை அவர்களுக்காக செய்ய வேண்டும். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 59-62)

(தொடரும்...)

## பொருள் தியாகம்

*ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார் -கள்: உங்களின் நேசத்திற்குரிய அந்த செல்வத்தையும் பொருட் -களையும் இறைவழியில் செலவு செய்யாத வரை, உண்மையான இரட்சிப்பை பெற்றுத் தரும் நன்மையை ஒருபோதும் பெற முடியாது.* (ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 38)

*அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களின் நேசத்திற்குரிய செல்வத்தை மனித இனத்தின் மீதான அனுதாபத்திற்காக நீங்கள் செலவு செய்யாத வரை நீங்கள் உண்மையான நன்மையை ஒருபோதும் பெற முடியாது.* (இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 358)



*எனவே இறைவன் திருப்தி கொள்கின்ற அந்த உண்மையான நன்மை பொருள் தியாகம் ஆகும் என்ற அளவுக்கு அல்லாஹ் பொருள் தியாகத்திற்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளான். ஆனால் நிபந்தனை என்னவென்றால், அவை இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக செய்யப்பட வேண்டும். மேலும் தனது விருப்பத்திற்குரிய பொருளை இறை திருப்தியைப் பெறும் பொருட்டும், படைப்பின சேவைக்காகவும் செலவு செய்யப்பட வேண்டும். பின்னர் அதே விஷயம் இரட்சிப்பிற்கான வழிமுறையாகவும் ஆகி விடுகிறது.*

*ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஒருவருடைய பசு நோய்வாய்ப்பட்டு விட்டால் மேலும் அது உயிர் பிழைப்பதற்கு எந்த நம்பிக்கையும் இல்லாதபோது அதனை நாங்கள் இறைவழியில் கொடுத்து விடுகின்றோம் என்று கூறிவிடுவது அல்லது ஒரு யாசகர் வந்து யாசிக்கும்போது அவருக்கு வீட்டில் உள்ள பழைய ரொட்டியை கொடுத்து விடுவது போன்ற செயல்கள் ஒன்றும் நன்மைகள் அல்ல.*

*வீட்டில் எவரும் உண்ணாத ரொட்டியைக் கொடுப்பது நன்மை அல்ல. அந்தப் பொருட்கள் பொதுவாகவே வீட்டில் உள்ளவர்களுக்குப் பயன்படாதவை ஆகி விட்டன.*

*ஒருவரின் நேசத்திற்குரிய செல்வமாக அது இருந்து பின்னர் அவர் அதனை அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக கொடுக்கும் செல்வமே அல்லாஹ்வின் வழியில் ஒப்புக் கொள்ளப்படுகிறது. இதுவே உண்மையான நன்மையாகும். இந்த விஷயமே படைப்பினத்தின் மீதான அனுதாபத்தை சரியாக வெளிப்படுத்து -கிறது. மற்றவர்களுக்காக நமது உள்ளத்தில் எவ்வளவு வேதனை உள்ளது என்பதும், நமது உள்ளத்தில் மார்க்கத் தொண்டாற்று -வதற்கு எவ்வளவு ஆர்வம் உள்ளது என்பதும், மேலும் அது குறித்து நமது உணர்வுகள் என்ன என்பதும் இதிலிருந்தே தெரிய வருகிறது.*

ஜுமுஆ குத்பா
06.01.2023

# ஆரியர்களும் பசுவும்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:


ஆரியர்களைப் பொருத்தவரை பசுவின் வாழ்வைக் காப்பாற்றும் பணி முக்கியத்துவ -மற்றதும் அவர்களின் வேத நூல்களில் கூறப்பபடாத ஒன்றுமாகும். இவ்வாறிருக்க இந்த விஷயத்தில் அவர்கள் காட்டும் உறுதிப்பாடு குறிப்பிடத்தக்கதாகும். உண்மையில் அவர்களின் எந்த ஒரு வேதமும் மாட்டிறைச்சியின் புனிதத்தைக் குறித்துக் கூறவில்லை என்பதை அவர்களின் பண்டிதர்களில் அறிஞர்கள் நன்கு அறிவர். வேத காலத்தில் மாட்டிறைச்சி சந்தையில் விற்கப்பட்டதும் ஆரியர்கள் அதனைக் களிப்புடன் உண்டு வந்ததும் ரிக் வேதத்தின் முதல் பாகத்திலிருந்து தெரிய வருகிறது. பாம்பேயின் முன்னாள் கவர்னர் மேதகு மவுண்ட் ஸ்டார்ட் எல்ஃபின்ஸ்டோன் சமீபத்தில் தி ஹிஸ்டரி ஆஃப் இண்டியா என்ற ஒரு நூலை எழுதியுள்ளார். அதில் அவர் ஆரியர்களின் வரலாற்றை நம்பத் தகுந்த பழங்கால புத்தகங்களின் ஒளியில் எழுதியுள்ளார். அவர் தனது நூலின் 89-வது பக்கத்தில் மனுதர்ம சாஸ்திரத்தின்படி பிராமணர்கள் தமது பண்டிகைகளின்போது எருதுகளின் மாமிசத்தை உண்ணுமாறு போதிக்கப்பட்டிருந்தனர் என்றும் அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் அது ஒரு குற்றமாகக் கருதப்பட்டது என்றும் எழுதியுள்ளார். இதைப் போன்ற ஒரு நூலை கல்கத்தாவிலிருந்து ஒரு பண்டிதர் வெளியிட்டுள்ளார். அதில் அவர் வேதங்களின் காலத்தில் மாட்டிறைச்சியை உண்பது இந்துக்களுக்கு மார்க்கக் கடமையாகக் கருதப்பட்டது என்றும் அதில் அதிகமான சிறந்த பங்கு பிராமணர்களுக்கு வழங்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். இதைப் போன்று மகாபாரதத்தின் 13-வது அதிகாரத்தில் மாட்டிறைச்சி ஆகுமானதும் தூய்மையானதும் மட்டுமல்ல. மாறாக, முன்னோர்களின் சார்பாக பிராமணர்களுக்கு வழங்குவதற்கான மிகச் சிறந்த உணவு அதுவே என்றும் அதன் விளைவாக முன்னோர்கள் பத்து மாதங்கள் திருப்தியுறுவர் என்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே வேதங்களின் அனைத்து ரிஷிகளும், மனுவும், பியாஸும் மாட்டிறைச்சி உண்பதை அவர்களது மார்க்கக் கடமையும் இறைவனின் நற்கூலியைப் பெற்றுத் தரும் செயல் என்றும் கருதியுள்ளனர்.

இவ்விஷயம் குறித்த இந்த ஏகோபித்த கருத்தில், 30 அக்டோபர் 1883-ல் மரணம் அடைந்த பண்டிட் தயானந்தின் கருத்தை சேர்க்காமல் விட்டால் சிலரது பார்வையில் என்னுடைய இந்த விளக்கம் முழுமை -யற்றதாகத் தெரியலாம். பண்டிட் தமது எந்த ஒரு நூலிலும் மாட்டிறைச்சி தடுக்கப்பட்டதும் தூய்மையற்றதும் ஆகும் என்று குறிப்பிட -வில்லை. அதைப் போன்று மாட்டிறைச்சி உண்பதும், பசுக்களை அறுப்பதும் வேதங்களைப் பொருத்தவரை தடுக்கப்பட்டது என்றும் அவர் நிரூபிக்கவில்லை. மாறாக பால் மற்றும் நெய்யின் விலையைக் குறைப்பதற்காகவே பசுக்களை அறுப்பது தடுக்கப்பட்டிருந்தது என்று அவர் கூறுகிறார். மேலும் அவரது சத்தியார்த்த பிரகாஷ் மற்றும் வேத்பாஷ் ஆகிய நூல்களிலிருந்து தெரிய வருவது என்னவெனில் பசுக்களை அறுப்பது சில தருணங்களில் அனுமதிக்கப் -பட்டதே ஆகும் என்பதை அவர் நம்புகிறார்.

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 4, ஆங்கிலப் பதிப்பு பக்கம் 8-9)

**உலக விஷயங்களில், காப்பி அடிப்பதால் பயன் குறைவு; நஷ்டம் அதிகம். ஆனால் சஹாபிகளைக் காப்பி அடித்தால், நஷ்டம் என்ற கேள்விக்கே இடமில்லை. பயன் மட்டுமே உள்ளது.**

நம்மில் எத்தனை பேரிடம் அல்லாஹ்வுக்கு இபாதத் செய்வதில் உண்மையாகவே ஆர்வம் உள்ளது என்று பாருங்கள்! ரமலானில் ஒரு மாதமல்ல அல்லது ஒரேயொரு முறை இஃதிகாஃப் இருந்து விட்டு பிறகு வருடம் முழுவதும் அல்லது பல வருடங்கள் அதை சொல்லிக் கொண்டிருக்காமல் நிரந்தரமாக உறுதிப்பாட்டுடன் இறைவனது நெருக்கம் நிரந்தரமாக கிடைப்பதற்கு நம்மில் எத்தனை பேர் முயற்சி செய்கிறோம்? அதனால் எத்தனை பேரிடம் இறைவன் தனது அன்பு பரிமாற்றத்தின் அடையாளத்–தைக் காட்டுகின்றான்; அவரிடம் பேசுகிறான்?



ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டு இந்த தகுதியை அடைவது அல்லது அடைய முயற்சி செய்வது ஒவ்வோர் அஹ்மதி மீதும் கடமையாகும். ஆகவே இதுவே புரட்சியாகும். இந்த இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை உருவாக்கவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். யதார்த்தத்தில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தகுதி ஒவ்வொருவருக்கும் புரிய வேண்டும். அன்னாரது தோற்றத்தின் நோக்கத்தை நிறைவேற்ற ஒவ்வொருவருக்கும் துடிப்பு வேண்டும். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் எத்தனை மகத்தான அடையாளங்களைக் காட்டினான் என்று நமக்கு தெரிந்தால் – அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு எண்ணற்ற அடையாளங்களைக் காட்டினான் என்று நமக்கு தெரிந்தால் – அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு எண்ணற்ற அடையாளங்களை வழங்கினான் என்று தெரிந்தால், நம்மில் ஒவ்வொருவரும் அந்த அந்தஸ்தைப் பெற விரும்பி இருப்போம். அதற்காக முயற்சி செய்திருப்போம். அங்கும் நேரடியாக அடையாளங்கள் தென்பட்டிருக்கும். பிறகு ஈமானிய ஆற்றலில் பிரகாசம் பிறந்திருக்கும். அதன் மூலம் எத்தகைய எண்ணத்தின் ஆற்றல் உருவாகியிருக்கும் என்றால், அதனால் இறை நெருக்கத்தைப் பெறுவதற்கு ஒரு சிறப்பான ஆர்வம் உருவாகி விடும்.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அடையாளங்களின் வெளிப்பாட்டினை இக்காலத்தில் இன்று வரை அல்லாஹ் நடத்திக் கொண்டு தான் இருக்கிறான். இந்த அடையாளங்கள் நமது உள்ளத்தில் ஒரு விதையை ஊன்ற வேண்டும். அதன் மூலம், நாமும் இறை நெருக்கத்தைப் பெற்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் அன்னாரின் எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய பரக்கத்தினால் அவர்களின் ஒவ்வொரு முன்மாதிரியையும் நம்மிடம் உள்வாங்கிக் கொண்டு அல்லாஹ்வின் அருளால், இறைவன் நம்மிடம் பிரத்யேகமாக நடந்து கொள்ளத்தக்க அந்தஸ்தை அடைய வேண்டும். நாம் உலக விஷயங்களில் பிறரைக் காப்பி அடிக்கிறோம். ஒருவரது நல்ல பொருட்களைப் பார்த்து ஆசைப்படுகிறோம். அதற்காக முயற்சி செய்கிறோம். அதனைப் பெற பல வழிகளைப் பயன்படுத்துகிறோம். இவ்விஷயத்தில் ஒவ்வொருவரும் தமது சிந்தனைக்கேற்ப அமல் செய்ய அல்லது காப்பி அடிக்க முயற்சி செய்கின்றனர்.

ஒருவர், மற்றவர் அழகான ஆடை அணிந்திருப்பதைப் பார்க்கிறார் அல்லது சூட் அணிந்து இருக்கக் காண்கிறார் எனில், தமக்கும் அது வேண்டும் என்று விரும்புகிறார் அல்லது இன்னும் வேறு ஒரு பொருளைப் பார்த்தால் அதன் மீது ஆசை உருவாகிறது. இப்போது டி.வி, உலகை மிக அருகில் கொண்டு வந்து விட்டது. நடுத்தர வர்க்கம் போகட்டும். ஏழைகள் கூட என்னிடம் இன்ன பொருள் இருக்க வேண்டும்; இன்ன பொருள் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். நம்மிடம் டி.வி. இருக்க வேண்டும். என்னிடம் ஃபிரிட்ஜ் இருக்க வேண்டும். ஏனெனில் அது இன்னாரிடம் உள்ளது. அவரும் என்னைப் போன்றவர்தான். அந்த இன்னொருவருக்கு அல்லது ஸைதுக்கு யாராவது ஒருவர் அன்பளிப்பாகக் கூட தந்திருக்கலாம். நான் அதில் பேராசைப்படக்கூடாது என்று நினைப்பதில்லை. உடனே அதனை வாங்க முயற்சி செய்யப்படுகிறது. ஏனெனில் ஸைதிடம் உள்ளது என்னிடமும் இருக்க வேண்டும். பிறகு கடன்வாங்க முயற்சி செய்யப்படுகிறது. சிலருக்கு இதற்காக உதவித்தொகை கேட்டு விண்ணப்பிக்கும் வழக்கமும் உள்ளது. கண்டிப்பாக ஜமாஅத், தனது வசதி வாய்ப்பிற்கேற்ப தேவை உள்ளவருக்கு தேவையை நிறைவேற்றுவது ஜமாஅத்தின் கடமைதான். ஆனால் விண்ணப்பம் தருபவர் – பாகிஸ்தான், இந்தியா அல்லது குறிப்பாக ஏழை நாடுகளைச் சேர்ந்தவர் தனது அனுமதிக்கப்பட்ட தேவைக்காக விண்ணப்பிக்க வேண்டும். தமது சுய கண்ணியத்தையும், கருத்தில் கொள்ள வேண்டும். ஓரளவுக்கு வசதியுள்ளவர்கள் கூட ஒருவரையொருவர் பார்த்து காப்பி அடிக்கின்றனர். புதிய சோபாவைப் பார்த்தால் தானும் அதுபோன்று வாங்க வேண்டும் என்று ஆசை வருகிறது. மாடலான டி.வி.யைப் பார்த்தால் அதனை வாங்க ஆசை வருகிறது. அதுபோன்று மற்ற மின்சாதனப் பொருட்கள், எலக்ட்ரானிக் பொருட்கள் வாங்க ஆசை வருகிறது. கடனுக்கு

கார் வாங்குகின்றனர். இங்கு இன்னொன்றும் கூறுவேன். தற்கால மோசமான பொருளாதாரச் சூழலில் இதுபோன்ற பொருட்களை வாங்குவதற்காக வங்கிகளில் வட்டிக்குக் கடன் வாங்கப்படுகிறது. வட்டி சாபமாகும். இது அவர்களை எங்கு வரை கொண்டு செல்லும் என்பதை அவர்கள் சிந்திப்பதில்லை. எவ்வாறிருப்பினும், இந்த வட்டிக்கடன் அவர்களை திவாலாக்கி விடுகிறது.

இப்போது மக்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் காப்பி அடிப்பது குறித்து கூறி வந்தேன். உலகியல் விஷயங்களில் மக்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் காப்பி அடிக்கின்றனர். அதனைப் பெறுவதற்காக தமது சுய கண்ணியத்தை இழந்து விடுகின்றனர் அல்லது திவாலாகி நொடிந்து போய் தமது சொத்தைக் கை நழுவ விடுகின்றனர். அதாவது உலக விஷயங்களில் காப்பி அடிப்பதால் பயன் குறைவு; நஷ்டம் அதிகம். ஆனால் மார்க்க விஷயத்தில் காப்பி அடித்தல், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் காட்டிய முன்மாதிரியின்படி ஆவதற்கு முயற்சி செய்வது சிறந்ததாகும். இன்னும் சொல்வதாயின், நம்மில் பலர் இறை நெருக்கத்தைப் பெற்ற சஹாபிகளையும் கூட பார்த்துள்ளனர். அவர்களை நாம் காப்பி அடிக்க முயற்சிப்பதில்லை. இங்கு நஷ்டம் என்ற கேள்விக்கே இடமில்லை. பலன் மட்டுமே உள்ளது. பலனும் கூட எத்தகையது எனில், வேறு எந்த இடத்திலும் அதனைப் போன்று பெற முடியாது. அதுதான் நன்மைகளில் மேம்படுத்தக் கூடிய காப்பி அடித்தலாகும். இந்த விஷயங்களை நாம் காப்பி அடிக்காததற்கு என்ன காரணம்? தெளிவாக தெரிவதாவது, ஒன்று நாம், இந்த விஷயங்களைப் பற்றி முற்றிலும் அறியவில்லை. இதனால் நமக்கு அந்த உணர்வே ஏற்படாமல் போய் விட்டது அல்லது இவ்வளவு நீண்ட காலத்திற்குப் பிறகு கூட தனது புத்தம்புதிய அடையாளங்களை இன்றும் கூட அல்லாஹ் வழங்குகிறான் என்பதைப் பற்றி மிகக் குறைந்த அறிவே உள்ளது. விளைவு அந்த கவனம் இல்லாமைக்குச் சமமாக ஆகி விட்டது.

உலகியல் விஷயங்களை நாம் டி.வி.யிலும், செய்தித்தாளிலும் போகும்போதும், வரும்போதும் பத்து முறை விளம்பரங்களில் பார்த்தும் விடுகிறோம். விஷயம் மூளையில் அமர்ந்து விடுகிறது. நான் இந்தப் பொருளை எப்படியாவது வாங்கிவிட வேண்டும்! உங்களுக்கு இந்தப் பொருள் எதற்கு தேவை என்று சிலரிடம் நாம் புரிய வைத்தால் அவர்களிடமிருந்து உடனே இவ்வாறு பதில் வருகிறது. ஏழைகளுக்கு ஆசை இருக்காதா? எங்களுக்கும் ஆசைகள் இருக்காதா? எங்கள் பிள்ளைகளுக்கு ஆசை இருக்காதா? எங்களிடமும் இந்தப் பொருள் இருக்க வேண்டும் என்று ஆசை இருக்காதா? ஆனால் இந்த ஆசைகளெல்லாம் இல்ஹாம் பற்றி கேள்விப்படும் போது நம்மிடம், இறைவன் பேச வேண்டுமே? நமக்காகவும் இறைவன் அடையாளங்களைக் காட்ட வேண்டுமே? தனது அன்பை நம்மீது வழங்க வேண்டுமே என்று தோன்றாததற்குக் காரணம் நமது உலமா, நமது முரப்பிகள், பொறுப்பாளர்கள், தத்தமது வட்டத்தில் இறை நேசத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்வதற்காக ஜமாஅத் அன்பர்களிடம் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறவில்லை அல்லது எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவு செய்யவில்லை அல்லது அவர்களது கவனம் திரும்பும் அளவுக்கு முன்மாதிரியைக் காட்டவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) மற்றும் அன்னாரது சஹாபிகளைப் பற்றி, மீண்டும் மீண்டும் குறிப்பிட்டு இறை உதவிகள் அந்தப் பெரியோர்களுக்கு எவ்வாறு கிடைத்தது என்று அழுத்தமாக சொல்லப்படவில்லை; உறுதியை உருவாக்கவில்லை; அல்லாஹ்வுடைய பண்புகளுக்கென்று குறிப்பிட்ட காலமோ, நேரமோ, குறிப்பிட்ட நபரோ மட்டும் இலக்கு ஆக்கப்படவில்லை என்ற உறுதியை உருவாக்கவில்லை. மாறாக அல்லாஹ் இன்றும் தனது பண்புகளை வெளிப்படுத்துகிறான் என்று மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டு, அந்த தொடர்பை ஏற்படுத்தும் வழிமுறைகளையும் கூறி வந்திருந்தால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்த வாக்குறுதிகளைக் கூறப்பட்டிருந்தால் இந்த சிறுவர்கள், இளைஞர்களிடம் நமது துஆ ஏன் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்ற எண்ணம் உருவாகி இருக்காது.

எனவே அல்லாஹ்வுடைய தொடர்பை உறுதிப்படுத்துவது அவசியமாகும். பிறகு துஆ ஒப்புக் கொள்ளப்படுவதின் தத்துவம் புரிய வரும். அடையாளங்களும் வெளிப்படுகின்றன. ஆகவே இதனை பொதுவாக எடுத்துரைக்க வேண்டும். இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மை அடியாருடன் இணைவதன் மூலம் அல்லாஹ்வுடைய நெருக்கத்தைப் பெற முடியும். அடையாளங்கள் நபி (ஸல்) அவர்களின் காலத்திற்கு மட்டுமோ அல்லது அவர்களுடன் மட்டும் தொடர்புடையதோ குறிப்பாக்கப்பட்டதோ அல்ல. மாறாக, இப்போது கூட அல்லாஹ் தனது எல்லா வல்லமைகளுடன் தனது பேரொளியைக் காட்டுகிறான். எனவே நன்மைகளைப் பெறும் துடிப்பு, அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறும் துடிப்பு நமது ஜமாஅத்தில் சகஜமாகி விட்டால் ஜமாஅத்தின் பெரும் பகுதி பாவத்தை அழித்து விடும். பாவத்தை முழுமையாக ஒழிப்பது சிரமமாகும். அவ்வாறு நாம் வாதம் செய்ய முடியாது. ஆனால் பெருமளவில் பாவத்திலிருந்து நம்மால் வெற்றி பெற்று விட முடியும் அல்லது ஜமாஅத்தின் பெரும் பகுதியினர் பாவத்தின் மீது வெற்றி பெற்றவர்களைச் சேர்ந்தவர்களாகி விடுவர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் இறைவன் கூறியுள்ளான். அன்னாரை முழுமையாகப் பின்பற்றுபவர் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவார் என்ற விஷயத்தைக் கூறி சீர்திருத்தம் செய்ய முயற்சி செய்ய வேண்டும். அத்தகையோரின் பெரும்பாலான துஆக்களை அல்லாஹ் கேட்கிறான். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் அத்தகையோர் உள்ளனர். என்னிடம் எழுதவும் செய்கின்றனர். அந்நிலை உருவாவதற்காக காப்பி அடிக்க வேண்டும். அதன் மூலம் இறைவனுடன் நெருக்கமான உறவு நிலைபெறும்.

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள்
24.01.2014 ஆன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து.....)

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிவுசார் அற்புதங்கள்

**ஜனாப் அதாவுல் முஜீப் ராஷித் ஸாஹிப்** (Naib Ameer & Imam of the London Mosque)

தமிழாக்கம்: இப்னு வஸீம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

## சுல்தானுல் கலம் - எழுதுகோலின் அரசர்

அருளுக்குரிய எல்லாம் வல்ல அல்லாஹ் இல்ஹாம் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு 'சுல்தானுல் கலம் - எழுதுகோலின் அரசர்' என்ற பட்டத்தை வழங்கினான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வாழ்வில் எந்த அறிவுச் சொத்தை நினைவாக விட்டுச் சென்றார்களோ அந்த அனைத்தும் இந்த இல்ஹாமின் பேசும் சான்றாகும். அன்னார் உரைநடையாக எழுதிய நூல்கள் இதற்குப் பேசும் சான்றுகள் ஆகும். அன்னார் கவிஞராக இருக்கவில்லை. ஆனால், அல்லாஹ் அன்னாருக்கு கவிதை மொழியிலும் விஷயங்களை எடுத்துரைப்பதற்காக வழங்கிய அந்தத் திறமையானது அறிவுசார் அற்புதத்தின் ஒரு வியக்க வைக்கும் முன்மாதிரியாகும். கவிதை கூறுவது நோக்கமாக இருக்கவில்லை. மாறாக, உண்மையை எட்டவைப்பதற்காக அன்னார் இந்த வழிமுறையைக் கையாண்டார்கள். அன்னார் கூறுகிறார்கள்:

کچھ شعر و شاعری سے اپنا نہیں تعلّق
اِس ڈھب سے کوئی سمجھے بس مدّعا یہی ہے

கவிதைகளைக் கூறுவதோடு எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. இந்த வழியில் எவராவது புரிந்து கொள்ளமாட்டாரா என்பதுதான் நோக்கம் ஆகும்.

அன்னார் அரபு, பாரசீகம் மற்றும் உருது ஆகிய மூன்று மொழிகளிலும் இறையிருப்பு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் இதர தப்ஸீ∴க் தலைப்புகளில் (மறுத்து) பதில் கூற முடியாத வகையில், தப்ஸீ∴க்கிற்கான உரிமையை நிறைவேற்றினார்கள். அல்லாஹ்வைப் பற்றிய அன்னாரது இறைஞானமிக்க கூற்று, ஏற்றுக் கொள்ளப்பட்ட தூதர் (ஸல்) அவர்களின் தூய மேன்மையை எடுத்துரைக்கும் அன்னாரது நஅத் கவிதைகள் நம்மவர்கள் மற்றும் அந்நியர்களின் உள்ளங்களை வென்று கொண்டே செல்கிறது. மூன்று மொழிகளிலும் அன்னாரால் எழுதப்பட்டுள்ள கவிதைத் திரள்கள் இன்றும் உள்ளங்களில் இறங்கிவிடும் நல்ல தாக்கங்களின் அடிப்படையில் அறிவுசார் அற்புதத்தின் கம்பீரமான முன்மாதிரியாகும்.

ஜமாஅத்தின் ஒரு புகழ் பெற்ற கவிஞர் ரஷீது கெய்ஸ்ரானீ சாஹிப் அவர்கள் என்ன அருமையாகக் கூறியுள்ளார்கள்:

وہی تو تھا کہ جو سلطانِ حرف و حکمت تھا
قلم کرشمہ تھا اور حرف معجزے اس کے

அவரே எழுத்துகள் மற்றும் நுட்பங்களின் பேரரசராக இருந்தார். அவரது எழுதுகோல் மந்திரமாகவும் எழுத்து அற்புதமாகவும் இருந்தது.

தூய தூதர் (ஸல்) அவர்களின் புனிதமான மேன்மையைப் பற்றிய அன்னாருடைய அரபு கஸீதாக்கள் குறித்து பிரசித்தி பெற்ற அறிஞர் அல்லாமா நியாஸ் ∴பத்ஹ்பூரீ இவ்வாறு எழுதியுள்ளார்: "மிர்ஸா சாஹிப் அவர்களின் இந்தப் புகழ்பெற்ற கஸீதா 69 கவிதைகளை உள்ளடக்கியது. தனது அனைத்து மொழிச் சிறப்புகள் அடிப்படையில் எத்தகைய வினோதமான விஷயம் என்றால், எந்த மத்ரஸாவிலும் அரபு இலக்கணங்களின் அடிப்படையைக் கூடப் படித்த -தில்லை. அப்படிப்பட்ட ஒருவர் எப்படி இந்த அளவு சொற்செறி -வும் சொல்லாட்சியும் மிக்க கவிதை எழுதும் ஆற்றல் பெற்றார் என்று புரியவில்லை. (லக்னோ.வின் 'நிகார்' பத்திரிகை ஏப்ரல் 1960 பக்கம் 52)




## எழுதுகோலின் அரசரின் சில நூல்கள் பற்றி அந்நியர்களின் திறனாய்வு

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகத்துவமிக்க அறிவுப்பூர்வமான எழுத்துக்களை அஹ்மதி அல்லாதவர்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் கூட

மிகவும் பாராட்டியுள்ளார்கள். மேலும், இந்த அற்புதமான ஜிஹாதுக்கு மனம் திறந்து புகழுரைத்தார்கள். அரபு மொழியில் ஒரு முதுமொழி உள்ளது. الفضل ما شهدت به الاعداءُ அதாவது, எதை எதிரியும் ஒப்புக் கொள்கிறாரோ அதுவே சிறப்பாகும். இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுதுகோல் ஜிஹாது தொடர்பாக அந்நியர்கள் ஒப்புக் கொண்டதன் சில மாதிரிகளை முன் வைக்கிறேன்.

பராஹீனே அஹ்மதிய்யாவைப் பற்றி அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சேர்ந்த மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிப் எழுதியுள்ளார்: "எமது கருத்துப்படி, இந்த நூல் இந்தக் காலத்தில் தற்போதைய நிலைமைகளின் கண்ணோட்டத்தில் எத்தகைய நூல் என்றால், அதற்கு நிகரான ஒன்று இன்று வரை இஸ்லாத்தில் எழுதப்பட -வில்லை. ('இஷாஅத்துஸ் ஸுன்னா' இதழ் தொகுதி 7, எண் 6, பக்கம் 169)



மவ்லவி ஷுஜாவுல்லாஹ் சாஹிப் 'மில்லத்' பத்திரிகையில் இவ்வாறு எழுதியுள்ளார்: "மர்ஹூம் மிர்ஸா குலாம் அஹ்மத் அவர்களின் எழுதுகோல் ஒரு மந்திரமாக இருந்தது. பல கடுமையான நோய்களில் மூழ்கியிருந்தும் எந்த அளவு எழுத்துப் பணிகளை அந்த நபர் செய்தாரோ, மேலும், எந்த அளவு அவருடைய எழுத்துகள் மார்க்க உலகில் தாக்கத்தை ஏற்படுத்தியனவோ இது சம்மந்தமாக அவரை எழுதுகோலின் அரசர் என்று கூறுவதில் எந்தத் தயக்கமும் இருக்க முடியாது." (மில்லத் பத்திரிகை 1910)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வ∴பாத்தின்போது அமிர்தசரஸின் வக்கீல் பத்திரிகையின் ஆசிரியர் மவ்லானா அபுல் கலாம் ஆஸாத் இவ்வாறு எழுதினார்:

"அந்த நபர் மாபெரும் நபராவார். அவருடைய எழுதுகோல் மாய வித்தையாகவும் அவரது நாவு மந்திரமாகவும் இருந்தது. அந்த நபர் சிந்தனையின் அற்புதங்களின் மொத்த உருவமாகத் திகழ்ந்தார். அவரது பார்வை ஒரு புரட்சியாகவும், குரல் ஒன்று திரட்டும் நாளாகவும் இருந்தது. அவருடைய விரல்களில் இருந்து புரட்சியின் மின்கம்பிகள் வெளிவந்தன. அவரது இரு கைகளும் மின்சாரத்தின் இரண்டு பேட்டரீகளாக இருந்தன. அந்த நபர் மார்க்க உலகிற்கு 30 ஆண்டுகள் வரை நிலநடுக்கமாகவும் பிளே∴க் நோயாகவும் இருந்து வந்தார். அவர் கியாமத்தின் ஓசையாக மாறி, உறங்கி கனவு கண்டு கொண்டிருந்தவர் -களைத் தட்டி எழுப்பினார்........ அந்த நபர் இப்போது உலகை விட்டுச் சென்று விட்டார்.........


மார்க்க அல்லது அறிவு உலகத்தில் புரட்சியை ஏற்படுத்தும் இத்தகைய மக்கள் அவ்வப்போது உலகிற்கு வந்து கொண்டிருப்பதில்லை. இந்த அரிய வரலாற்றின் புதல்வர்கள் மிகக் குறைவாகவே உலகின் பார்வைக்கு வருகிறார்கள். அவர்கள் வரும் போது உலகில் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கிக் காட்டி விட்டுச் செல்கிறார்கள்....... இவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிராக ஒரு வெற்றி பெற்ற தளபதியின் கடமையை நிறைவேற்றி வந்த, இவர்களின் தனிச்சிறப்பானது நாம் இந்த உணர்வை பகிரங்கமாக ஒப்புக் கொள்ள நம்மை நிர்பந்திக்கிறது.......... கிருஸ்தவர்கள் மற்றும் ஆரியர்களுக்கு எதிராக மிர்ஸா சாஹிப் அவர்களிடமிருந்து வெளிபட்ட அவர்களுடைய நூல்கள் பொது ஏற்புடமை என்ற சான்றிதழைப் பெற்று விட்டன. மேலும், இந்த தனிச்சிறப்பில் அவருக்கு எந்த அறிமுகமும் தேவையில்லை." ('வக்கீல்' பத்திரிகை, அமிர்தசரஸ்)

தில்லியின் 'கர்ஸன் கெஸட்' பத்திரிகையின் ஆசிரியர் தில்லியைச் சேர்ந்த மிர்ஸா ஹைரத் சாஹிப் இவ்வாறு எழுதியுள்ளார்: "எந்தப் பெரும் பெரும் ஆரியருக்கும், பெரும் பெரும் பாதிரி -யாருக்கும் மர்ஹூம் அவர்களுக்கு எதிராக வாயைத் திறப்பதற்கு தைரியமே இருக்கவில்லை........ மர்ஹூம் பஞ்சாபியாக இருந்தார். எனினும், அவருடைய எழுதுகோலில் எந்த அளவு ஆற்றல் இருந்தது என்றால், இன்று முழு பஞ்சாபிலும், இன்னும் கூறுவதாயின், இந்தியாவின் உயரத்திலும் இந்த அளவு ஆற்றலுடன் எழுதுபவர் எவருமில்லை..... ஆற்றல் மிகுந்த அவருடைய நூல்கள் தனது மேன்மையில் முற்றிலும் தனித்துவம் வாய்ந்தவையாகும். உண்மையாகவே இதன் சில வாக்கியங்களைப் படிப்பதனால் ஒரு தன்னிலை மறக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. (தில்லியின் 'கர்ஸன் கெஸட்' ஜுன் 1, 1908)

## அரபி மொழியில் எல்லா விதத்திலும் ஆற்றல் பெற்றுத் திகழ்வது நபிமார்களின் அற்புதங்களில் ஒன்றாகும்

அரபு மொழியை முற்றிலும் சூழ்வது நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) உடைய அற்புதங்களில் ஒன்றாகும். இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் இமாம் ஷா∴பீ (ரஹி) அவர்களின் ஒரு கூற்றை எழுதியுள்ளார்கள். அது தன்னில் ஒரு முன்னறிவிப்பு வடிவத்தைக் கெண்டுள்ளது. அவர்கள் கூறினார்கள்: "அரபு மொழி தொடர்பாக இமாம் ஷா∴பீ (ரஹி) அவர்களின் இந்தக் கூற்று முற்றிலும் சரியானதுதான்: لَا يَعْلَمُهُ إِلَّا نَبِيٌّ அதாவது, இந்த மொழியை, இதன் பல்வேறு வகையான உவமைகளை நபிமார்களைத் தவிர வேறு எந்த நபராலும் முழுமையாக அறிந்து கொள்ளவே முடியாது. இந்தக் கூற்றிலிருந்து இந்த மொழியை முழுமையாக சூழ்ந்து கொள்வது நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) உடைய அற்புதங்களில் ஒன்றாகும் என்பது நிருபணமாகிறது. (நுஸூலுல் மஸீஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 18, பக்கம் 437)

இந்த விதியின் அடிப்படையில் இந்த உண்மைத்துவம் எந்த அளவுக்கு ஈமானுக்கு வலுவூட்டக் கூடியதாகும். அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அரேபியாவில் இருந்து மிகவும் தூர தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் பிறந்தார்கள். மறைவானவற்றை நன்கறிந்த இறைவன் தன்னுடைய இந்த தூதருக்கு நேரடியாக




அரபு மொழி மற்றும் திருக்குர்ஆனின் அறிவை எந்த அளவு ஆழமாக வழங்கியுள்ளான் என்றால், அன்னார் இ.ஃஜாஸுல் மஸீஹ் நூலை எழுதியபோது, அதற்கு பதில் எழுதுவதற்காக அரேபியாவின் அறிஞர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள்.

அப்போது ஓர் அறிஞர் கூட போட்டிக் களத்துக்கு வரவில்லை. மேற்கொண்டு ஈமானுக்கு வலுவூட்டும் விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் வ.ஃபாத்துக்கான சான்றைத் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் இருந்து முன் வைத்த போது அரபு உலகின் உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள், எடுத்துக்காட்டாக, ஷேக் முஹம்மது அப்தஹ், ரஷீது ரஸா, அல்லாமா மஹ்மூது ஷல்த்தூத், அல்லாமா அத்னான் இப்ராஹீம் மற்றும் பல அறிஞர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வ.ஃபாத் ஆகி விட்டார்கள் என்பதை பகிரங்கமாக வழிமொழிந்தார்கள்.

இத்தகைய அறிஞர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இவ்வாறே, அன்னார் அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று அரபு மொழி மொழிகளின் தாயாக உள்ளது என்ற சிந்தனையை முன் வைத்த போது, அரபு மொழியில் உலகளாவிய அளவில் புகழ்பெற்றிருந்த அறிஞர்கள் இந்த சிந்தனைக்கு வழிமொழிந்தார்கள்.

எடுத்துக்காட்டாக, எகிப்தின் தத்துவ ஞானியும் எழுத்தாளருமான டாக்டர் முஸ்த.ஃபா மஹ்மூது, லெபனானின் எழுத்தாளரும் கவிஞருமான ர.ஃபீகுல் ம.ஃலூ.ஃப், அரேபியரான டாக்டர் சயீது ஷர்பீனீ, சிரியாவின் அறிஞர் டாக்டர் அப்துல் ஹமீதுல் ஹமீதீ அல்வைஸ் மற்றும் மராகஷின் அறிஞர் அப்துல்லாஹ் பூ.ஃபைம் ஆகியோர் இருக்கிறார்கள். இந்த அரேபிய அறிஞர்களின் பெயர்ப்பட்டியல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இந்த அறிவுசார் அற்புதங்களின் மகத்துவம் இந்த விஷயத்தால் இன்னும் உயர்கிறது. அதாவது, இவை எத்தகைய விஷயங்கள் என்றால், இவற்றைப் பற்றிய அறிவை அல்லாஹ் குறிப்பாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கினான். அன்னாரோ ஒருபோதும் அரபுக் கல்வியை எந்தக் கல்விக்கூடத்தில் இருந்தும் கற்கவில்லை. ஆனால், நுபுவ்வத் எனும் ஒளியின் பரக்கத்தால் அன்னார் இந்த விஷயங்களை வாதித்தார்கள். இன்று அரபு உலகம் அன்னாரால் முன்வைக்கப்பட்ட சிந்தனைகளை சரியானவை என்று ஏற்றுக் கொண்டே செல்கிறது.

## அறிவுசார் அற்புதங்கள் - புதிய வரலாற்றுக் கண்டுபிடிப்புகளின் ஒளியில்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் இருந்து முடிவுகளை எடுத்துரைத்ததன் விளைவாக தம்முடைய நூல்களில் எந்த இரகசியங்களைத் திறந்தார்களோ, அவை இன்று புதிய ஆய்வுகளின் ஒளியில் உலகின் அறிவு மற்றும் ஆய்வு வட்டங்களில் அதிகம் ஏற்றுக் கொள்ளப்பட்டுக் கொண்டே செல்கின்றன. அவை அன்னாரின் அறிவுசார் அற்புதங்களின் மேன்மையை மிகவும் ஒளிமிக்கதாக ஆக்கிக் கொண்டே இருக்கின்றன. சில எடுத்துக்காட்டுகளை முன் வைக்கிறேன்:

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் இயற்கை மரணம் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது நூலான இஸாலாயே அவ்ஹாமில் 30 திருக்குர்ஆன் வசனங்களை எடுத்து வைத்தார்கள். இது சம்மந்தமாக தவப்.ஃபீ எனும் சொல்லைப் பற்றி பரிசுக்கான சவாலையும் விடுத்தார்கள். அதாவது, எந்த வகையில், இந்த சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதோ இதன் பொருள் இயற்கை மரணத்தைத் தவிர வேறு ஏதும் இருக்க முடியாது. இந்த விதியை எவராலும் உடைக்கவும் முடியவில்லை; உடைக்கவும் முடியாது.

ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களின் சிலுவை மரணம் கிறிஸ்தவக் கொள்கையின் மையக் கருவாகும். இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் பைபிளில் இருந்து எத்தகைய தெளிவான சான்றுகளை மிகவும் கம்பீரமாக அறுதியிட்டு கூறினார்கள் என்றால், அவை இந்தக் கொள்கையை வேரறுத்து வைத்து விட்டது.

சிலுவையை முறித்த இந்த அரும்பணி அன்னாரது எத்தகைய மேன்மைமிக்க அறிவுசார் அற்புதம் என்றால், அதற்கு எவரும் பதில் அளிக்க முடியாது. இது மட்டுமல்லாமல், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

அவர்கள் 'மஸீஹ் ஹிந்துஸ்தான் மேன் - இந்தியாவில் இயேசு' என்ற தமது நூலில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவை மரணத்தில் இருந்து தப்பித்த பிறகு, கிழக்கை நோக்கி பயணம் செய்தது, கடைசியில் காஷ்மீரில் இயற்கை மரணம் அடைந்தது மற்றும் ஸ்ரீநகரில் மஸீஹின் மண்ணறையை அடையாளம் காட்டி ஒரு வகையில், இந்தத் தலைப்பில் சான்று முத்திரை பதித்து விட்டார்கள்.

சிலுவை முறிப்பது தொடர்பான அன்னாரது இந்த மகத்துவமிக்க ரகசிய திறப்பு ஓர் உலகளாவிய அறிவுசார் அற்புதத்தின் கம்பீரமான உதாரணமாகும். இந்த சிந்தனைக்கு மேற்கொண்டு ஆதரவளிக்கும் வகையில், ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களின் க.்பன் மற்றும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு அளிக்கப்பட்ட களிம்பு பற்றி மேற்கொண்டு ஆய்வுகள் தொடர்கின்றன.

அறிவுக் களத்தில் எந்த அற்புதமான இறைஆதரவு மற்றும் உதவி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கிடைத்ததோ அதைப் பற்றி குறிப்பிட்டவாறு அன்னார் கூறினார்கள்: "எனது நாவிற்கு ஆதரவாக இன்னொரு நாவு பேசுகிறது. என்னுடைய கைகளுக்கு வலு சேர்ப்பதற்காக இன்னொரு கை இயங்கிக் கொண்டிருக்கிறது. அதை உலகம் காண்பதில்லை. ஆனால், நான் காண்கிறேன். எனக்குள் ஒரு வானத்து ஒளி பேசுகிறது. அது என்னுடைய ஒவ்வொரு சொல்லுக்கும், ஒவ்வோர் எழுத்துக்கும் வாழ்வளிக்கிறது." (இஸாலயே அவ்ஹாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3, பக்கம் 403)

## அற்புதங்களின் தொடரும் தாக்கங்கள் ஒரு பார்வை

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் எந்த மகத்துவமிக்க அறிவுசார் அற்புதங்களை வழங்கினானோ, உண்மையில், அன்னாரால் எடுத்துரைக்கப்பட்ட ஆதாரங்களும் சான்றுகளும் முழு உலகிலும் ஒரு மகத்துவமிக்க புரட்சியை ஏற்படுத்தி விட்டன. அதன் தாக்கங்களின் வட்டம் விரிவடைந்து கொண்டே செல்கிறது.

இந்த அற்புதங்கள் முழு உலகையும் ஓரிறைவன் பக்கம் திருப்பி விட்டன. மேலும், மார்க்க உலகில் ஒரு புதிய காலகட்டம் துவங்கி விட்டது. இந்த அற்புதங்களின் தாக்கங்களின் வட்டம் சர்வதேச அளவில் உள்ளது. அன்னாருக்கு அருகில் உள்ளவர்கள் மட்டும் இந்த உண்மையின் ஒளியில் இருந்து பலன் பெறவில்லை. அதையும் தாண்டி பல மைல் தொலைவில் இருப்பவர்களும், ஒரு நீண்ட காலம் கழிந்த பிறகும், தேர்ந்தெடுக்கப்பட்ட வாழ்வளிக்கும் நீர்வீழ்ச்சியின் அருள் மூலமாக புது ஆன்மிக வாழ்வைப் பெறுகிறார்கள்.

இறைவனை நிராகரித்தவர்கள் ஓரிறைவனுக்கு முன் குனிகிறார்கள். அருளின் நீரூற்று ஓடிக் கொண்டிருக்கிறது. அது எல்லா சமயங்களையும் ஏற்பவர்களின் தாகத்தைத் தணித்து, இந்த வாழ்வின் தண்ணீரால் அவர்களுக்கு ஒரு புதிய வாழ்வளிக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய்மையான சொற்கள் இன்றும் உலகின் எல்லைகளில் ஒளித்துக் கொண்டிருக்கின்றன. அன்னார் எந்த அளவு அறுதியிட்டும் கம்பீரமாகவும் கூறுகிறார்கள் பாருங்கள்:

'இழப்பிற்குரியவர்களே! இந்த நீரூற்றின் பக்கம் வாருங்கள். இது உங்களின் தாகத்தைத் தணிக்கும். இது வாழ்வின் நீரூற்றாகும். அது உங்களைக் காக்கும்.' (கிஷ்தீ நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19, பக்கம் 21,22)

## முடிவுரை:

அருளுக்குரிய எல்லாம் வல்ல அல்லாஹ் தனது பரிவு மற்றும் பேரருளால் நம் அன்பிற்குரிய எஜமானர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குத் தன்னிடமிருந்து எந்த மகத்துவமிக்க, முடிவுறாத அறிவுசார் அற்புதங்களை வழங்கினான் என்றால், அவற்றைப் பற்றி ஒரு இரத்தினச் சுருக்கமான குறிப்பைத் தங்கள் முன் எடுத்து வைப்பதற்கான நற்பேறு கிடைத்தது. இந்தக் குறிப்போ என்றென்றும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இறைவன் இந்த அறிவுசார் அற்புதங்களின் அருள்கள், முழு உலகின் மக்களுக்கும் எப்பொழுதும் கிடைத்துக் கொண்டே இருக்கச் செய்வானாக! அல்லாஹ் உலகத்தை இந்த அருள்களில் இருந்து பலன் பெறக்கூடியதாக ஆக்குவானாக! அவனுடைய எல்லையற்ற கருணைகளையும் பரக்கத்துகளையும் பெறக்கூடியதாக ஆக்குவானாக! ஆமீன்!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நீங்கள் அல்லாஹ்வைத் தேட வேண்டும் என்றால் வறியவர்களின் உள்ளத்திற்கு அருகில் சென்று தேடுங்கள். இதன் காரணமாகத்தான் இறைத் தூதர்கள் ஏழ்மையின் ஆடையை அணிந்திருந்தார்-கள். அதே போன்று பெரிய சமுதாயத்தின் மக்கள் சிறிய சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். மேலும் என்னுடைய குடும்பம் பெரியது என எவரும் கூற வேண்டாம். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் என்னிடம் வரும்போது நீங்கள் எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என நான் உங்களிடம் கேள்வி கேட்க மாட்டேன். மாறாக உங்களுடைய செயல் எவ்வாறாக இருந்தது என்றுதான் நான் கேட்பேன். இவ்வாறே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தன் மகளிடம், ஃபாத்திமாவே! எல்லாம் வல்ல இறைவன் இனத்தைக் குறித்து (நீ எந்த ஜாதி, இனம், சமூகம் என்று) கேட்க மாட்டான். நீ ஏதாவது தவறு செய்திருந்தால் இறைத் தூதரின் மகள் என்ற காரணத்தினால் இறைவன் உன்னை மன்னிக்க மாட்டான் என்று கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 370)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam